Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீமுருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம் 20 நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P: 060 2212472
(சி/2201)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 14 (06.02.2004) வெள்ளிக்கிழமை இதழ்:128

# நேற்றும் தொடர்ந்து நடந்த உண்ணாவிரதப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்கி, தம்மை சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்குமாறு கோரி நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது.

வலி.வடக்கு பிரதேச செயலகம் முன் பன்னிரண்டு பேரும், தென்மராட்சி சாவகச்சேரி பிரதேசசெயலகம் முன் ஒருவருமாக மொத்தம் 13 பேர் இந்த உண்ணா விரதப் போராட்டத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)



தெல்லிப்பழையில் உண்ணாநோன்பிருக்கும் ஒருவருக்கு சேலைன் ஏற்றப்படுவதை முதற்படத்திலும், தென்மராட்சியில் உண்ணாவிரதம் இருப்பவர் சோர்வுற்ற நிலையில் இருப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## உண்ணாநோன்பிருக்கும் ஒருவர் கவலைக்கிடமான நிலையில்!

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்குப் பிரதேச செயலகம்முன் உண்ணாநோன்பிருந்து வரும் 12 பேரில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகியுள்ளது.

செல்லையா செல்வராசா (வயது 37) என்பவரது உடல் சோர்வடைந்து மிகவும் கவலைக்கிடமான நிலைக்குச் சென்றுள்ளது. இதனால், இவருக்கு நேற்றுமுதல் 'சேலைன்' ஏற்றப்பட்டு வருகிறது. உண்ணாவிரதமிருப்போரில் பெரும்பாலானோர் நேற்று சோர்வடைந்த நிலையில் காணப்பட்டனர்.

உண்ணாநோன்பு தொடர்ந்து நடைபெறுமானால் இவர்களின் நிலை மோசமடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (91)

## யாழ்.படைத் தளபதியின் அழைப்பை உண்ணாவிரதமிருப்போர் நிராகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியினால் விடுக்கப்பட்ட அழைப்பை உண்ணாநோன்பிருக்கும் மக்கள் நிராகரித்தனர்.

வலி.வடக்குப் பிரதேசத்தில் தாம் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படல் வேண்டும் எனத் தெரிவித்து, வலி.வடக்கு பிரதேச செயலகம் முன் உண்ணாவிரதமிருந்து வரும் மக்களை - யாழ்.மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால சந்திப்பதற்காக பலாலிப் படைத்தளத்திற்கு வருமாறு அழைத்திருந்தார்.

உண்ணாவிரதமிருப்போர் சார்பில் ஒருவரேனும் தம்முடன் பேசவருதல் வேண்டும் எனவும், தான் - மக்கள் உண்ணாவிரதம் இருக்கும் இடத்திற்கு விஜயம் செய்வது தமக்குப் பாதுகாப்பு ரீதியான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் எனவும் அதிகாரிகள் மூலம் தெரிவித்திருந்தார்.

எனினும், அவரது கோரிக்கையை நிராகரித்த உண்ணாவிரதமிருப்போர், வேண்டுமானால் படைத்தளபதி, தாம் உண்ணா (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு பகுதிகளிலிருந்து

# இராணுவம், அதிரடிப் படையினரை அகற்றி பொலிஸாரை பணியில் அமர்த்த வேண்டும்!

## புதிய கண்காணிப்புக்குழுத் தலைவர் பேட்டி!

(கொழும்பு)

**வடக்கு - கிழக்குப் பகுதிகளில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரையும் விசேட அதிரடிப்படையினரையும் அகற்றிவிட்டு, அந்த இடங்களில் பொதுமக்களின பிரச்சினைகளைக் கையாள்வதற்கு நன்றாகப் பயிற்சி அளிக்கப்பட்ட பொலிஸாரை அரசாங்கம் நிறுத்தவேண்டும்.**

**இவ்வாறு, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே நேற்று ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.**

**அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -**

இலங்கையில் தற்போது அரசியல் குழப்ப நிலை ஏற்பட்டுள்ள போதும் கடந்த 10 மாதங்களாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டிருந்தும், போர்நிறுத்தம் உறுதியான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 10 மாதங்களில் பாரிய மாற்றங்கள் எதனையும் நாம் காணவில்லை. இது ஒரு நல்ல விடயமாகும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டமையானது, சில வேளைகளில் ஆபத்தான நிலைமைகளை உருவாக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவ்வாறான ஆபத்தான செயற்பாடுகள் எதனையும் நான் இதுவரை காணவில்லை.

அத்துடன், சமாதானப் பேச்சுவார்த்தைகள் நின்றுபோயுள்ள நிலையிலும் விடுதலைப் புலிகளும் படைத்தரப்பினரும், வடக்கு - கிழக்கில் உள்ளூரில் அடிக்கடி சந்தித்து இனங்களுக்கிடையிலான பதற்றத்தைத் தணிக்கும் வகையில் பேச்சுக்களை நடத்தி வருகின்றார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை பொறுப்பாளர் படையினரால் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைக்கு அரசியற் பணிக்காக சென்ற இரு விடுதலைப் புலி உறுப்பினர்கள் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை எட்டாம் கட்டைப் பகுதியில் அரசியற் பணிக்காகச் சென்ற தெல்லிப்பழை பிரதேச பொறுப்பாளர் ஜனா, அவரது உதவியாளர் சிட்டு ஆகிய இருவருமே தாக்கப்பட்டுள்ளனர்.

அரசியற்பணிக்காகச் சென்று கொண்டிருந்தவேளை, அவர்களை வழிமறித்த இராணுவத்தினர் இவர்களைக் கடுமையாகத் தாக்கியதுடன்மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றக் கலைப்புக்கு சமாதான முன்னணி எதிர்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடாளுமனறைக் கலைக்கக் கூடாதெனவும், அவ்வாறு அவர் கலைத்தால் அதற்கெதிராகப் பாரிய எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படும் எனவும், சமாதானத்திற்கும், ஜனநாயகத்திற்குமான மக்கள் முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் இந்த முன்னணியின் கூட்டத்தில் அதன்தலைவரும், முன்னாள் ஜனசவிய ஆணையாளருமான சுசில் சிறிவர்த்தன தெரிவித்ததாவது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில்

# ராட்சத சரக்கு விமானம் விபத்து; 10 மணிநேரம் போக்குவரத்து தடை!

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இராட்சத சரக்கு விமானமொன்று தரையிறங்க முற்பட்டபோது விபத்துக்குள்ளானதால், நேற்றுமுன்தினம் இரவிலிருந்து சுமார் 10 மணிநேரம் இந்த விமான நிலையம் ஊடான விமானப் போக்குவரத்துக்கள் யாவும் தடைப்பட்டன.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

டுபாயிலிருந்து ஐ.எல்.18 ரக இராட்சத சரக்கு விமானம், நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்தது. எக்ஸ்போ அவியேசன் நிறுவனத்தால் இயக் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email:-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# சர்வதேச பாடசாலை கிளிநொச்சியில் திறப்பு

சர்வதேச தரத்திற்கு ஏற்ப தாயக மண்ணில் சிறார்களை வளர்த்தெடுக்கும் தூரநோக்குடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கிளிநொச்சியில் நிறுவியுள்ள சர்வதேசப் பாடசாலை நேற்றுக்காலை 10.30 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

சிறார்களுக்கு அடிப்படையில் இருந்தே மண்ணின் சூழலுக்கும், காலத்திற்கும், சர்வதேச தரத்திற்கும் ஏற்ப கல்வி புகட்டி ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் நல் நோக்குடன் நிறுவப்பட்டுள்ள இந்தப் பாடசாலை திறப்புவிழா தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.இனியவனின் நெறிப்படுத்தலில் பாடசாலை முதல்வர் திருமதி.இராமலிங்கம் தலைமையில் ஆரம்பமாகியது.

பொது ஈகைச்சுடரினை மாவீரர் லெப்ரினனன்ட் சீலனின் தாயார் திரேசம்மா மெய்யப்பன் ஏற்றிவைத்தார்.

தேசியக் கொடியினை அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைக்க, மாவீரர் நினைவுப் பீடத்திற்கு தமிழீழ மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா மலர்வணக்கம் செலுத்தினார். தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸரியும், பாடசாலைக் கொடியினை பாடசாலை முதல்வர் திருமதி இராமலிங்கமும் ஏற்றினர்.

மங்கள விளக்கினை யுனிசெவ் வதிவிடப்பிரதிநிதி திருமதி பெனிபுறூன், கிளிநொச்சி அரசியற்துறைக் கோட்டப் பொறுப்பாளர் முரளி ஆகியோர் ஏற்றிவைத்தனர். பாடசாலைக் கட்டடத்தினை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.

சிறப்புரைகளை அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர், வவுனியா, கிளிநொச்சி சர்வதேச பாடசாலை முதல்வர்கள் ஆகியோர் உரையாற்றினர்.

# புத்தக கண்காட்சியும் விற்பனையும்

தேசிய கல்வி நிறுவனம் தமிழ் மொழிமூலம் வெளியிட்ட புத்தகங்கள், ஆசிரிய கைநூல்கள், பாடத்திட்டங்கள் தொடர்பான வீடியோப் பிரதிகளின் கண்காட்சியும், விற்பனையும் இன்றும் நாளையும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த இரண்டுநாட்களும் காலை 9 மணியிலிருந்து மாலை 2 மணி வரை இந்தக் கண்காட்சியும், விற்பனையும் நடைபெறவுள்ளது. இதில் கல்விசம்மந்தமான பல புதிய புத்தகங்களும் வீடியோப் பிரதிகளும் வைக்கப்படவுள்ளன.

எனவே இவற்றை பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிட்டு தமக்கு வேண்டியவற்றை வாங்கிப் பயன்பெறுமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார்.

### சாவகச்சேரி பாதுகாப்பு வலயத்திலுள்ள

# கண்ணாடிப்பிட்டி மயானம் நேற்று நகரசபை ஊழியரால் சிரமதானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள கண்ணாடிப்பிட்டி மயானம் நேற்று நகரசபை ஊழியர்களால் சிரமதானம் செய்யப்பட்டது.

இராணுவ பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இந்த மயானம் இந்தப் பகுதியில் நடைபெற்ற யுத்த நடவடிக்கையின் பின்னர் அப்பகுதிக்கு செல்வதற்கு அனுமதிக்கப் பட்டிருந்தது.

யுத்தத்தினால் சேதமடைந்த இந்த மயானம் பற்றைகளாலும் முட்புதர்களும் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. தகனக் கிரியைகள் செய்வதற்கு ஏற்படும் இடையூறுகளை தவிர்ப்பதற்காக இந்த மயானத்தை சிரமதானம் செய்வதற்கு நகரசபைச் செயலாளர் தலைமையில் ஊழியர்கள் சிரமதான பணிகளை மேற்கொண்டனர்.

இந்த மயானத்தை சிரமாதானம் செய்வதற்கான அனுமதியை அந்தப்பகுதி இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

(29)


திறைஞ்சனாஸ் சங்கானை

சிம்பு, சர்மி நடித்த

காதல் அழிவதில்லை

(சி-2196)

காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)

ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

HULK

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும்

ஒரே தின வெளியீடு

பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா

நடித்த

ஜெய்

(சி-2197)

காட்சிநேரம் :

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.


# பணிநிலை வெற்றிடம்

## ஆயப்பகுதி

**ஆயப் பகுதியில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன**

### 01.அலுவலர் (ஆண்கள்)

தகைமைகள்:

க.பொ.த (உயர்தர) இல் பொருத்தமான பிரிவில் 3 பாடங்களுக்குக் குறையாமல் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

### 02.ஆய உதவியாளர் (ஆண்கள்)

தகைமைகள்:

க.பொ.த (சாதாரண) இல் தமிழ்,கணிதம் உட்பட ஆறுபாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

### 03.அலுவலக உதவியாளர் (ஆண்கள்)

தகைமைகள்:

ஆண்டு 10 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

### 04.பாதுகாவலர்

தகைமைகள்:

ஆண்டு 9 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

உடல் வலுவும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

- தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும்
- ஊழியர் நயநிதி வசதி உண்டு

**நேர்முகத்தேர்வு**

இடம்: ஆயப்பகுதி, நடுவப்பணியகம், கிளிநொச்சி

காலம்: 2004.02. 10ஆம்,11 ஆம் நாள் காலை 11 மணி

பொருத்தமான வேண்டுகையாளர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தன்வரலாறு (சுயவிபரம்), சான்றிதழ்களுடன் சமூகம் தரவும்.

02.02.2004

ஆயம், நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்




## ஜனாதிபதியின் நடவடிக்கையை வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவர்களில் 81 வீதமானோர் ஆதரிக்கின்றனராம்!

### ஜே.வி.பி சார்பு இணையத்தளம் கூறுகிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தினால் தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் உருவாகியிருப்பதாக - 63 வீதமான வடக்கு - கிழக்கு மக்களும், 41 வீதமான நாட்டின் ஏனைய பகுதி மக்களும் கருத்துத் தெரிவித்திருப்பதாக ஜே.வி.பி.சார்பு இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பெடுத்துக் கொண்டதற்கு 81 வீதமான வடக்கு - கிழக்குப்பகுதி மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். நாட்டின் ஏனைய பகுதி மக்களிடையே இதற்கு 58 வீதமான ஆதரவு கிடைத்திருக்கிறது.

45 வீதமான தென்பகுதி மக்கள் கடந்த இரண்டு வருடங்களில் வாழ்க்கை நிலை தமக்கு மிகவும் மோசமானதாக அமைந்ததாகக் கூறினர்.

அதேவேளை, 50 சதவீதமான வடக்கு - கிழக்கு பகுதி மக்கள் கடந்த இரண்டு வருட காலத்தில் தமது வாழ்க்கை நிலையில் எந்தமாற்றமும் ஏற்படவில்லை என்று கூறினர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சிகள் தொடர்பாக கையாளும் முறைகுறித்து 43 வீதமான தென்பகுதி மக்களும், 28 வீதமான வடக்கு - கிழக்கு மக்களும் ஒத்துப்போகவில்லை என்று கருத்து வெளியிட்டனர்.

52 வீதமான தென்பகுதி மக்களும், 33 வீதமான வடக்கு - கிழக்கு மக்களும் சமாதான முயற்சிகளில் இந்தியா பங்கேற்றால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வும், நாட்டில் கௌரவமான சமாதானமும் ஏற்படும் என்றும் கருத்து வெளியிட்டிருப்பதாக அந்த இணையத்தளம் மேலும் கருத்து வெளியிட்டிருக்கிறது.



மகரகமவில் நடைபெற்ற தேசப்பற்று தேசிய முன்னணியின் முதலாவது கூட்டத்தில் கலந்து கொண்டவர்களைப் படத்தில் காணலாம்.

## நிந்தவூரில் காணாமல்போன மாடுகளை விடுதலைப்புலிகள் மீட்டுக்கொடுத்தனர்!

அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் பள்ளிவாசலில் ஹஜ் யாத்திரையின் இறுதி நாளில் ஏழைகளுக்கு வழங்கவென வைத்திருந்த மாடுகளில் - களவுபோன நான்கு மாடுகளை விடுதலைப் புலிகள் மீட்டுக்கொடுத்ததையடுத்து நிந்தவூர் பள்ளிவாசல் நிர்வாகம் புலிகளுக்குத் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

நிந்தவூர் பள்ளிவாசலிலிருந்த மாடுகளில் நான்கு களவாடப்பட்டிருந்தது. இவை திருக்கோயில் பகுதியில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. அவற்றை மீட்டுத்தருமாறு விடுதலைப் புலிகளிடம் முறையிட்டனர்.

உடனே செயலில் இறங்கிய புலிகள் களவு போன மாடுகளை மீட்டதுடன், திருடர்களையும் பிடித்தனர். அத்துடன் தமது வாகனத்திலேயே இந்த மாடுகளை ஏற்றி நிந்தவூர் பள்ளிவாசலில் உடனடியாக ஒப்படைத்தனர்.

விடுதலைப் புலிகளின் இந்த நடவடிக்கையை நிந்தவூர் பள்ளிவாசல் சமூகம் பாராட்டியுள்ளதுடன் தமது நன்றிகளையும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் - முஸ்லிம்களுடன் நாம் நல்லுறவைப் பேணிவருகின்றோம். அத்துடன் தொடர்ந்தும் சுமுகநிலையில் இருக்கவேண்டும் என்பதே எமது விருப்பம் எனவும் தெரிவித்தார். (07)

## காலனித்துவ நாடாக இலங்கை மாறுகிறது

### விமல் வீரவன்ச கூறுகிறார்

(கொழும்பு)



விடுதலைப் போராட்டத்தின்மூலம் இந்தியா சுதந்திரமடைந்த அதேவேளை இலங்கைக்கு அதனோடிணைந்த வகையிலேயே சுதந்திரம் கிடைத்தது. இன்று இந்தியா தனது நாட்டுப் பிரஜைகளை அண்டவெளிக்கு அனுப்புகின்ற அளவுக்கு முன்னேறியுள்ளபோது, இலங்கையையோ மீண்டும் காலனித்துவ நாடாக மாறும் நிலையை நோக்கிச்சென்றுகொண்டிருக்கிறது.

இவ்வாறு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், தேசபற்று தேசிய முன்னணியின் அமைப்புக்குழு உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மகரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேசப்பற்று தேசிய முன்னணியின் ஆரம்பவைபவத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

நாடு தற்போது பிளவுபடும் ஆபத்தான சூழலில் இருக்கிறது. பொருளாதார நெருக்கடிகள் மோசமடைந்துவருகின்றன. தேசிய வளங்கள் அந்நிய நாடுகளுக்கு விற்கப்படுவதுடன், எமது நாட்டின் கலாசாரமும் சீரழிக்கப்படுகிறது.

இவற்றை எல்லாம் தடுத்துநிறுத்துவதற்குப் போராடுவதற்கே தேசப்பற்று தேசிய முன்னணி உருவாக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் வண. வெலிகம சிறி ஞானரத்ன தேரோ அமரபுர பீடாதிபதியின் சார்பில் உரையாற்றினார். இந்த நிகழ்வில் தேசப்பற்று தேசிய முன்னணியின் இணையத்தளத்தை உயர்நீதிமன்ற முன்னாள் பிரதம நீதியரசர் ஆர்.எஸ்.வணசுந்தர ஆரம்பித்துவைத்தார்.

## கூட்டு அரசாங்கத்தையே அமைக்க விரும்புகின்றோம்

### மைத்திரிபால சிறிசேன கூறுகிறார்

கூட்டு முன்னணி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கே தாம் முற்படுவதாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது - கடந்த நாற்பது ஆண்டுகால அரசியல் வரலாற்றில் கூட்டுச்சேர்ந்து ஆட்சி அமைப்பதென்பது சாதாரணமானதொரு விடயமாகும். அதனடிப்படையிலே ஜே.வி.பி யுடன் கூட்டுச்சேர்ந்தோம்.

இதனை எவரும் தவறான அரசியல் நடவடிக்கையாக கருதமுடியாது. எமது கட்சி கூட்டு முயற்சியினால் ஓர் அரசாங்கம் அமைப்பதையே விரும்புகின்றது. நாட்டில் சிக்கல்களை உருவாக்குவது எமது நோக்கமல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

## நாடாளுமன்றத்தை கலைக்குமாறு சுதந்திரக்கட்சி மத்திய குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு கேட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனினும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா - மத்திய குழு உறுப்பினர்களின் இந்தத் தீர்மானம் குறித்து உடனடியாக எதுவும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை நாடாளுமன்றக் கலைப்பு தொடர்பாக தாம் இறுதி முடிவு எடுக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம், பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்குப் போதிய நிதி வளம் இலலை. தேர்தலை எதிர்கொள்வதற்கான நிதி வளத்தைப் பெற்றுக் கொள்ள குறைந்தது இரண்டு மாதங்களாவது தேவை.

ஐக்கிய தேசியக்கட்சியின் பின்னால், பாரிய வர்த்தக சமூகம் இருப்பதால் அவர்களால் பொதுத் தேர்தலை உடனடியாக எதிர்கொள்ளக் கூடிய நிதிவளத்தைப் பெற்றுக்கொள்வதில் எந்தத்தடையும் இருக்காது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பொறுத்தவரை நிலைமை அவ்வாறு இல்லை என்றும் ஜனாதிபதி சந்திரிகா கருத்துத் தெரிவித்தார்.

ஜனாதபதி சந்திரிகாவின் கருத்தை மத்தியகுழு உறுப்பினர்கள் பலரும் ஏற்றுக்கொண்ட போதிலும், தற்போதைய சூழ்நிலையில் வெற்றி வாய்ப்பு சுதந்திரக்கட்சிக்குச் சார்பாக இருப்பதால தேர்தலை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றமுடியும் என்று தெரிவித்தனர்.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா கலந்துரையாடல் நடத்தவுள்ளார். இந்தக கூட்டத்தில், தேர்தல் குறித்த இறுதி முடிவை ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## விடுமுறையில் சென்றிருந்த புலனாய்வு சிப்பாய் மீது சூடு

### பதுளையில் சம்பவம்

விடுறையில் வீட்டுக்குச் சென்றிருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இனந்தெரியாத நபர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

மட்டக்களப்பில் நிலைகொண்டுள்ள 233 ஆவது பிரிகேட் தளத்தில் பணியாற்றும் இராணுவப் புலனாய்வுப்பிரிவு உத்தியோகத்தர் - பசறையிலுள்ள லுணுகல, கெசல்வத்த ஹொற்றஸ் என்ற இடத்திலுள்ள தனது வீட்டிற்கு விடுமுறையில் சென்றிருந்தார்.

இவர்மீது மாலை 7.00 மணியளவில் இனந்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினார். இந்தத் தாக்குதலில் படுகாயமுற்ற இராணுவச் சிப்பாய நோட்டன் பிரிட்ஜ் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் அவர் அங்கிருந்து பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்த தகவல் வெளியிட்ட இராணுவ வட்டாரங்கள் துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபர் புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினராக இருக்கலாம் என்று தெரிவித்தனர். லுணுகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## பேரியல் அஷ்ரப்பின் நடவடிக்கை; முஸ்லிம் பெண்களுக்கு இழுக்கு!

### முஸ்லிம் முன்னணி கண்டனம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன், பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி கடந்த வாரம் இணைந்து கொண்ட பின்னர் - பேரியல் அஷ்ரப் ரில்வின் சில்வாவிற்கு வணக்கம் செலுத்தி கைலாகு கொடுத்தார்

இவரது இந்தச் செயற்பாடு இரணடும் இஸ்லாமிய முறைக்கு முரணான செயலெனக்கூறி முஸ்லீம் முன்னணி என்ற அமைப்பு கண்டித்து அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பேரியல் அஷ்ரப்பின் இந்த நடவடிக்கை இஸ்லாத்திற்கு முரணான செயல. அத்துடன் இஸ்லாமிய பெண்களையும் அவமதிக்கும் செயலாகும்.

ஏற்கனவே அஷ்ரப்பின் காலத்தில் அவர் இவ்வாறு வேறாருவருக்கு வணக்கம் சொல்லியபின் பொது மன்னிப்புக் கேட்டவர். எனவே, இவரும் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டது முஸ்லீம்களுக்கு அவமானமாகும்.

ரில்வின் சில்வாவை வணங்கித்தான் இவர் முஸ்லீம்களின் உரிமையை பெற்றுக்கொடுக்க முடியுமாக இருந்தால் அந்த உரிமை எமக்கு அவசியமில்லை. இது தொடர்பாக தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித்தலைவர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா கருத்துத் தெரிவிக்கையில்

ஒருவருக்கு வணக்கம் செலுத்துவதும், மரியாதை செலுத்துவதும் வித்தியாசமானது. எனவே, பேரியல் மரியாதையின் நிமிர்த்தமே செயற்பட்டுள்ளார். அரசியல் முரண்பாடுகளாலேயே இந்தக்கருத்து வெளிவந்திருக்கலாம் எனத் தெரிவித்தார். (01)

## பேசாலை முகாமில் தங்கியுள்ள அகதிகள் சொந்த இடங்களுக்குச் செல்ல விருப்பம்!

(மன்னார்)

மன்னார் பேசாலை அகதிமுகாமில் தங்கியுள்ள அகதிகளில் - 15 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேர் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர். இவ்வாறு விருப்பம் தெரிவித்த 15 குடும்பங்களில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டுசுட்டான், வண்ணாங்குளம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மிகுதி 9 குடும்பங்களைச் சேர்ந்த 44 பேர் கிளிநொச்சி மாவட்டத்தின் செல்வா நகரைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் 1990 ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து இன்றுவரை இந்த அகதிமுகாமிலேயே தங்கியுள்ளனர்.

இவ்வாறு சொந்த இடம் திரும்பவுள்ள 15 குடும்பங்களுக்குமான போக்குவரத்து வசதிகளை மன்னார் நகர உதவி அரச அதிபர் பணிமனையினர் மேற்கொண்டுவருகின்றனர். (201)

## தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் போட்டித் தொடரையும் மேற்கிந்தியத்தீவு அணி இழந்தது


கலிஸ்

தென்னாபிரிக்க - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில், நடைபெற்று வந்த ஒருநாள் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஜொகன்ஸ்பேர்க்கில் நடந்த இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்கா நான்கு விக்கெட்டுக்களால் வென்றதுடன் தொடரையும் கைப்பற்றியது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித்தலைவர், முதலில் தமது அணி துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார். இதன்படி முதலில் ஆடத்தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் 2 விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து 304 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கைல் கடைசிவரை ஆட்டமிழக்காமல் 153 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள், 3சிக்ஸர்கள் அடங்கலாக 152 ஓட்டங்களை எடுத்தார். சந்திரபோல் 85 ஓட்டங்களையும், அணித்தலைவர் லாரா 11 ஓட்டங்களையும் பெற்றனர். றிக்காடோபவல் 24 பந்துகளைச் சந்தித்து 49 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். இதில் நான்கு பவுண்டரிகளும், இரண்டு சிக்ஸர்களும் அடங்கும்.

பந்து வீச்சாளர்களில் குளுஸ்னர், ஸ்மித் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பெரியதொரு ஓட்ட இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 49.4 ஓவரில் 6 விக்கட்டுக்களை மட்டும் இழந்து


கைல்

வெற்றி இலக்கை அடைந்தது. இதில் அணித்தலைவர் ஸ்மித் 58 ஓட்டஙகளையும், கலிஸ் 139 ஓட்டங்களையும், றுடோல்ப் 35 ஓட்டங்களையும் பெற்றதுடன், பொலக் 3 பந்துகளில் 12 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைய வழி செய்தார்.

பந்துவீச்சில் கொலிமோர், ராம்பவுல் இருவரும் தலா இரு விக்கெட்டுக்களையும் கேளி, கைல் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நடந்து முடிந்த 4 டெஸ்ட் தொடரிலும் 3:0 என்ற நிலையிலும், ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் 3:1 என்ற நிலையிலும் தென்னாபிரிக்கா வென்றமை குறிப்பிடத்தக்கது.

## இன்று நடைபெறும் கிரிக்கெட் போட்டிகள்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வருகின்ற கிரிக்கெட் போட்டிகளில் இன்று பி.ப 2.00 மணிக்கும், நாளை காலை 9.00 மணிக்கும் இரு போட்டிகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதும்போட்டியும்,

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில், ஸ்ரான்லி கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும் மோதவுள்ளது. (58)

## யாழ். மத்திய கல்லூரி மாணவர்களின் தெரு ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமாக நேற்று நடைபெற்ற தெருஓட்டப் போட்டியில் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர்.

வர்த்தக வங்கியின் ஆதரவில் நடைபெற்ற மேற்படி தெரு ஓட்டப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற 13 வயதுப் பிரிவு, 15 வயது பிரிவு, 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு 1000 ரூபா 750 ரூபா 500 ரூபா என்ற வகையில் சேமிப்புக் கணக்கில் பணம் இடப்பட்டு சேமிப்பு புத்தகங்கள் வழங்கப்பட்டவுள் ௗன.

யாழ். நகரப் பாடசாலைகள் சிலவற்றில் மேற்படி தெரு ஓட்டப் போட்டி நடைபெற்று வருகின்ற போதிலும், முதன் முதலில் யாழ். நகரில் பாடசாலை ரீதியில் தெருவோட்ட போட்டியினை யாழ். மத்திய கல்லூரியே ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இதே போல், யாழ். நகரில் முதன் முதலில படகு ஓட்டப்போட்டி மற்றும் நீச்சல் போட்டியினையும் கடந்த வாரம் சாட்டிக் கடலில் நடாத்தி முடித்திருந்தமை தெரிந்ததே. (58)

## இந்தியாவுடனான இறுதிப்போட்டியில் அதிர்ஷ்டம் எங்கள் பக்கமே உள்ளது!

### ஜிலெஸ்பி கூறுகிறார்

இந்தியா - அவுஸ்ரேலியா மோதும் முத்தரப்பு கிரிக்கெட் இறுதி ஆட்டம் பற்றிய பரபரப்பு உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. வீரர்கள் மத்தியிலும் பதட்டத்தை அதிகப்படுத்தி உள்ள இந்தப்போட்டி குறித்து அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் ஜிலெஸ்பி கூறுகையில் -

கடந்த சில வாரங்களாக இந்திய அணிக்கு கைகொடுத்த அதிர்ஷ்டம் தற்போது எங்கள் பக்கம் திரும்பி இருக்கின்றது. இந்தியாவின் தொடக்க வீரர்கள் சிலர் கிடைத்த அதிர்ஷ்டத்தை சரியாக பயன்படுத்தி சிக்கலில் இருந்து அணியைக் காத்தனர். இறுதிப் போட்டியில் அது நடக்காது. மீண்டும் அவுஸ்ரேலியா தனது பழைய நிலையை எட்டி இருக்கிறது என்றார்.

டெஸ்ட் போட்டியில் தொடங்கி, ஒருநாள் கிரிக்கெட்டிலும் சரியாக விக்கெட் சாய்க்காமல் தடுமாறிக்கொண்டிருக்கும் ஜிலெஸ்பி மேலும் கூறும்போது, பேர்த் ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு கைகொடுத்தது. ஆனால், மெல்போர்ன் ஆடுகளம் அது போல் இருக்காது. ஆனால், ஒட்டுமொத்த அவுஸ்ரேலிய அணியும் இதற்காக சரியான திட்டம் வகுத்துள்ளது. திடமான இலக்கில் பந்து வீசினாலே போதும் என்ற நிலைக்கு வந்திருக்கிறோம். இந்திய அணிக்கு சோதனை கொடுக்க இதைவிட சரியான திட்டம் வேறு இருக்க முடியாது என்றார்.

## விளையாட்டு

## சாதனையை சமன்செய்த ராவிட்

இந்திய அணியின் முன்னணி துடுப்பாட் வீரர்களில் ஒருவர் ராகுல் ராவிட். இந்தியா வெற்றி பெற பல போட்டிகளில் இவர் காரணமாக இருந்தார்.

சிம்பாப்வேயுடனான இறுதி லீக் ஆட்டத்தில் 10 ஓட்டங்களே எடுத்தார். என்றாலும், அவர் ஒரு புதிய சாதனையை சமன் செய்துள்ளார். தொடர்ந்து 119 போட்டிகளில் ராவிட் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டம் இழந்தது கிடையாது. இதற்கு முன்பு நியூசிலாந்து முன்னாள் கப்டன் மார்ட்டின் குரோவ் 119 போட்டியில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தது இல்லை.

ராவிட் கடைசியாக 1999 ஆம் ஆண்டு கொழும்பில் அவுஸ்ரேலியாவிற்கு எதிராக ஓட்டம் எதுவும் பெறாமலே ஆட்டமிழந்தார். ஒரு நாள் போட்டியில் அவர் 4 முறை ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். பாகிஸ்தானுக்கெதிராக இரண்டு முறையும், தென் ஆபிரிக்கா, அவுஸ்ரேலியாவிற்கெதிராக தலா ஒருமுறையும் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

## சோனியாவைக் குறிவைத்தே தேர்தலில் பிரசாரம் நடத்தப்படும்

### ஜெயலலிதா அறிவிப்பு

வெளிநாட்டவரான சோனியாகாந்தி பிரதமராகக் கூடாது என்ற வாதத்தை ஆணித்தரமாக முன்வைத்தே நாடாளுமன்றத் தேர்தலில் பிரசாரம் செய்யவேண்டும் என்று அ.தி.மு.க வினருக்கு முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

அ.தி.மு.க பொதுக்குழு,செயற்குழுக் கூட்டங்கள் நேற்று முன்தினம் மாலை சென்னை அருகே உள்ள குளப்பாக்கத்தில் நடந்தன. இந்தக்கூட்டத்திற்கு நிதியமைச்சரும், அ.தி.மு.க அவைத்தலைவருமான பொன்னையன் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் ஜெயலலிதா பேசுகையில் அ.தி.மு.க வினருக்கு தேர்தல் தொடர்பான பல்வேறு உத்தரவுகளை வழங்கினார்.ஜெயலலிதாவின் பேச்சுவிபரம் வருமாறு -

காங்கிரஸ் நமது முக்கிய எதிரி. அக்கட்சி மீது இருமுனைத்தாக்குதல் தொடுக்க வேண்டும். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி



வெளிநாட்டவர் என்ற வாதத்தை மக்கள் மத்தியில் ஆணித்தரமாக எடுத்துரைக்க வேண்டும்.

சோனியாவையும், வாஜ்பாயையும் ஒப்பிட்டுச் சோனியாவைவிட வாஜ்பாய் சிறந்தவர் என்ற ரீதியில் பிரசாரம் அமைய வேண்டும்.

இந்தியாவை இந்தியர் தான் ஆளவேண்டும். அப்படிப்பார்க்கையில் வாஜ்பாய்தான் தற்போதைக்கு சிறந்த பிரதமர். இதன் காரணமாகத்தான் பா.ஜ.க.வுடன் நமது கட்சி கூட்டணி வைத்துள்ளது. இதே போல காங்கிரசுக்கும், தி.மு.க.வுக்கும் ஏற்பட்டுள்ள புனிதமற்ற சந்தர்ப்பவாத உறவையும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த வேண்டும்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தி.மு.க வுக்கும், ம.தி.மு.க வுக்கும் தொடர்பு இருப்பதாக ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டபோது , குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசில் இடம்பெற்றிருந்த தி.மு.க அமைச்சரை நீக்க வேண்டும் என்று காங்கிரஸ் கோரியது. அதை நிறைவேற்றாததால் தான் குஜ்ரால் ஆட்சியையே காங்கிரஸ் கவிழ்த்தது.

அதே காங்கிரஸ்தான் இப்போது, தி.மு.க, ம.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துள்ளது. ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையில் தி.மு.க, ம.தி.மு.க மீது புகார் கூறப்படவில்லை என்று காங்கிரஸ் கூறுவது வெறும் வதந்தி.

இறுதி அறிக்கையில் தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் விடுவிக்கப்பட்டதாக காங்கிரஸ் கூறினாலும், விடுதலைப்புலிகளுக்கும் இந்த இரு கட்சிகளுக்கும் உள்ள உறவை நாடறியும்.

ராஜீவ் காந்தி கொலைக்கு காரணமானவர்களுடன் சோனியா கை கோர்த்திருப்பது அவமானகரமானது. இதை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் இது கொள்கை இல்லாத கூட்டணி.

இதையும் மக்களிடம் அ.தி.மு.க தொண்டர்கள் விளக்கி தீவிரப்பிரசாரத்தில் ஈடுபட வேண்டும் என்றார் ஜெயலலிதா.

## வைகோ மீதான நிபந்தனைகள் தளர்வு நாளை பிணையில் வெளியே வருகிறார்



(சென்னை)

பொடா வழக்கில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ மற்றும் அவரது கட்சி நிர்வாகிகள் உட்பட 9 பேர் கைதாகி வேலூர் சிறையில் இருந்தனர். வைகோ தவிர மற்றைய 8 பேரும் 555 நாட்கள் சிறைவாசத்துக்குப் பிறகு பிணையில் வெளியேவர உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

தி.மு.க தலைவர் கருணாநிதி கேட்டுக் கொண்டதால் வைகோவும் பொடா நீதிமன்றில் பிணை மனுத்தாக்கல் செய்தார். கடந்த 3 ஆம் திகதி பொடா நீதிமன்ற நீதிபதி ராஜேந்திரன் நிபந்தனையில் பிணை வழங்கி தீர்ப்புக் கூறினார்.

இதில் 13 நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. சென்னையை விட்டு வைகோ வெளியே செல்லக்கூடாது. தினமும் நீதிமன்றில் ஆஜராக வேண்டும். என்பன உட்பட பல்வேறு நிபந்தனைகளை அவர் ஏற்பதற்கான பிரமாணவாக்கு மூலப்பத்திரம் வழங்கினால்தான் அவருக்கு பிணை வழங்கப்படும் என்று அவருக்கு நீதிபதி உத்தரவிட்டிருந்தார். அது பற்றிக் கருத்து கூறவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டிருந்தது. இதனால், வைகோ பிணையில் வருவதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்த நிபந்தனைகளை ஏற்பது குறித்து நேற்றுமுன்தினம் மாலை வரை வைகோ எந்த முடிவையும் பொடா நீதிமன்றில் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில், பொடா நீதிமன்று விதித்துள்ள நிபந்தனைகளுள் சிலவற்றை தளர்த்த வேண்டும் என்று கோரி நேற்று முன்தினம் காலை வைகோ சார்பில் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு - நீதிபதிகள் வி.எஸ்.கிர்புர்கர், இப்ராகிம் அலிபுல்லா ஆகியோர் முன்னிலையில் அவசர மனுவாக எடுத்துக்கொள்ளப்பட்டது. வைகோ சார்பில் சட்டத்தரணி கே.சந்துருவும் அரசதரப்பில் சட்டத்தரணி என்.ஆர்.சந்திரனும் வாதாடினார்கள். இதையடுத்து, நீதிபதிகள் இடைக்கால உத்தரவு பிறப்பித்தனர். அதன் விபரம் வருமாறு -

வைகோ பிணையில் வந்தால் சென்னையைவிட்டு வெளியே செல்லலாம். செல்லும் இடம் பற்றிய பயணவிபரத்தை விசாரணை பொலிஸ் அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும்.

விடுமுறை நாட்களில் மெட் ரோபாலிட்டன் நீதிமன்றில் வைகோ ஆஜராகத்தேவையில்லை. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யத் தேவையில்லை. அதற்குப்பதில் நீதிமன்றில் உத்தரவாதம் வழங்கினால் போதும். இவ்வாறு இடைக்கால உத்தரவில் கூறப்பட்டிருந்தது.

பிணை மனு நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளதால் வைகோ சார்பில் நேற்று பூந்தமல்லி பொடா நீதிமன்றில் உத்தரவாதம் வழங்கப்பட்டது. ரூபா 50 ஆயிரத்துக்கான சொந்தப்பிணை அதே தொகைக்கான இரு நபர் பிணையும் வழங்கப்படுகிறது.

575 நாட்களுக்கும் அதிகமான நாட்கள் சிறையில் இருந்து விட்டு பிணையில் நாளை வெளியே வரும் வைகோவுக்கு வேலூரில் ம.தி.மு.கவினர் பிரமாண்ட வரவேற்பு அளிக்க ஏற்பாடுசெய்து வருகிறார்கள்.

# அரசியல்வாதிகளாலும் பொது நிறுவனங்களாலும் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் பூரணமாவதில்லை

## யாழ்.நல்லூர் கோட்டப்பொறுப்பாளர் குற்றச்சாட்டு

அண்மைக் காலங்களாக அரசியல் காட்சிகள், அரசியல்வாதிகள், மற்றும் பொது நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் பொதுமக்களுக்கான வளர்ச்சி திட்டங்கள் எதுவும் பூரணமாக நிறைவேற்றப்படாததினால். அவை எதிர்காலத்தில் அந்தச் சமூகத்தில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என யாழ்.நல்லூர் கோட்ட பொறுப்பாளர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற யாழ்.நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில், இந்தக் குற்றச்சாட்டை யாழ்.நல்லூர் கோட்ட பொறுப்பாளர் பொ.சுஸ்வரன் சுமத்தினார்.

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில் - சில காலத்துக்கு முன்பு இங்கு செயற்பட்ட கட்சிகளினால் பக்கசார்பான முறையில் பொதுமக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இன்று வேறு கட்சிகள் இவ்வாறு செயற்படுகின்றன, அதேமாதிரியான ஓர் செயற்பாட்டிலேயே பொதுநிறுவனங்களும் செயற்படுகின்றன என எண்ண வேண்டியுள்ளது. இவ்வாறான நிறுவனங்கள் தமது திட்டங்களைச் செயற்படுத்தியவுடன், அவை பற்றி பின்பு நேரடியாகக் கவனிப்பதில்லை. இதன் பயனாக மக்களுக்கான சேவை, பயன் முழுமையைப் பூரணப்படுத்தப்படுவதில்லை. இதனால், அந்தச் சமூகத்தில் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

அந்த வகையில், எமது தேசியத் தலைவரின் விருப்பத்திற்கு இணங்க ஒவ்வொரு கிராமமூடாகச் சென்று - கிராமரீதியாக ஊரகக் கிளைகளை அமைத்து, நாம் செயற்படவேண்டியுள்ளது. இதுவே, பொதுமக்களுக்குச் சரியானமுறையில் உதவிகள், சேவைகள் சென்றடைவதை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. ஒரு கிராமத்தில் ஓர் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும்போது, 100 வீதம் திருப்தியடையாவிடினும், 85 வீத மக்கள் அத்திட்டத்தில் திருப்தியடையவேண்டும் என எண்ணுகின்றோம்.

கிராமங்களில் காணப்படும் மக்களின் சரியான தேவைகளை இனங்காணப்பட்டு, அவர்களின் தேவையை புரிந்து கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில், இங்கு இரண்டு பிரதேசசெயலர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். மக்களுக்கு எவை தேவை, எவ்வகையான பிரச்சினை காணப்படுகின்றன என ஊரகக்கிளை ஊடாக நாம் இங்கு முன்மொழிவுகளையும், பிரேரணைகளையும் தெரிவிக்கின்றோம். அதனடிப்படையில் இவை தீர்க்கப்படவேண்டும். அந்த வகையில் -

அண்மையில் தமிழீழ சுகாதாரப்பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசாரத்தில், தேசிய எழுச்சிப் பேரவையின் பங்களிப்பு அளப்பரியது. சிறந்த பொதுச்சேவையை இந்த அமைப்பினூடாகப் பெறமுடிந்தது. கிராம மக்களுக்கு எமது செயலின் தேவை பூரணமாக உணர்த்தப்பட்டது. மக்கள் திருப்திப்பட்டனர். இவ்வாறாகத்தான் அரசியல் நடவடிக்கைள் அமையவேண்டும். அதைவிடுத்து கண்துடைப்பான நடவடிக்கைகளை எமது மக்கள் ஏற்கமாட்டார்கள். இவ்வாறாக எதிர்வரும் காலங்களில் அரச அதிபர், உதவி அரசாங்க அதிபர்களின் ஒத்துழைப்புடன் எதிர்கால நடவடிக்கைகள், திட்டங்கள் எழுச்சிப் பேரவையூடாகச் செயற்படுத்தவேண்டும்.

நாம் இந்த ஊரகக் கிளைகளினூடாகச் சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகளின் குறைகளைக் கண்டறிந்துள்ளதுடன், இவற்றுக்கு முதன்மைநிலை வழங்கி, எம்மால் இயன்ற உதவித் திட்டங்களையும் வழங்கியுள்ளோம். அந்த வகையில் வெளிநாட்டு உதவி நிறுவனங்களுக்குக் கிடைக்கும் நிதி நிலைமைகளுக்கு அப்பால் எமக்கு கிடைக்கும் நிதியினை -

அருள்மாதா சனசமூக நிலையத்துக்கு சிறுவர்பூங்கா புனரமைப்பு, ஞானவொளி சனசமூகநிலைய இரவு கல்விக்கு மின்விளக்கு, பாரதி சனசமூக நிலையத்துக்குச் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், பாஷையூர் பகுதி விதவைத் தாய்மார்களின் பிள்ளைகளுக்கு கல்விநல நிதித்திட்டம் போன்றவற்றை இந்த ஊரகக் கிளைகளினூடாக முன்னெடுக்கின்றோம்.

எனவே அரசியல்வாதிகளும், பொது நிறுவனங்களும் தமது திட்டங்களை மக்களுக்கு நேரடியாகப் பயன்பெறக்கூடியவாறு பூரணப்படுத்தவேண்டும். அதுவே மக்கள் விருப்பம் என்றார். (205)

### ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் நாவலர்மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில்- இன்று பி.ப. 5.30 மணிக்கு 'திண்ணிய தொண்டர்' எனும் விடயம் தொடர்பாகக் கம்பன் கழக அமைப்பாளர் ஸ்ரீ.பிரஷாந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

### இல்ல மெய்வன்மைப் போட்டி

பருத்தித்தறை மெதடிஸ்த பெணகள் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் - நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி சி.சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில்- பிரதம விருந்திராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சிறப்பு விருந்தினராக பழைய மாணவி திருமதி இந்திராணி பாஸ்கரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளளனர். (12)

### முன்பள்ளிகளில் போஷாக்குத் திட்டம்

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் அனுசரணையுடன், கல்விமேம்பாட்டு நிதியத்தின் கீழுள்ள உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின்கீழ் இயங்கும் முன்பள்ளிகளில் - போஷாக்குத் திட்டம் நடைமுறைப்படுததப்பட்டு வருகினறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 142 முன்பள்ளிகளில், 106 முன்பள்ளிகளில் கல்விகற்று வரும் 3225 சிறார்களுக்கான சத்துணவுத் திட்டத்தினை கியுடெக், வெற்விசன் ஆகிய நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. இந்தத் திட்டத்தின்மூலம் சிறார்களின் போஷாக்கு மேம்படுத்துவதுடன், பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவும் ஒழுங்காக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### இளைஞரைக் காணவில்லை

காரைநகர் பிள்ளையார் ஆலயத்திருவிழாவிற்குச் சென்றசமயம், சிவன் கோவிலடி காரைநகரைச் சேர்ந்த அம்பலவி முருகன் நிர்மலன் (வயது -17) என்ற இளைஞன் காணாமற்போயுள்ளார்.

கடந்த மாதம் 31 ஆம் திகதியே இவர் காணாமற்போயுள்ளார். எங்கு தேடியும் இவர்பற்றிய தகவல் கிடைககவில்லை எனத் தெரிவித்த அவரது பெற்றோர், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். (ப)

### வசதிகளற்றநிலையில் இயங்கும் முன்பள்ளி

(யாழ்ப்பாணம்)

வளலாய் கலைக்கதிர் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் முன்பள்ளியில் - கல்வி கற்கும் மாணவர்கள் தளபாட வசதிகளற்று, நிலத்திலிருந்து கல்வி கற்கின்றனர்.

இது தொடர்பாக சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் பொது அமைப்புக்களுக்குத் தெரியப்படுத்தியும், எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

### மலசலகூடம் அமைக்க அறிக்கைகளை சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

கல்வயல் கிராம அலுவலர் பிரிவில் இந்து கலாசார அமைச்சிடமிருந்து - வீடு, மலசலகூடம் திருத்துவதற்கென சிமெந்து பெற்றுக்கொண்ட 77 பேரையும், தமது வேலை தொடர்பான முன்னேற்ற அறிக்கையினைக் கல்வயல் சனசமுக நிலையத்தினரிடமிருந்து பெறறு, அடுத்த நிவாரண முத்திரை பெறுவதற்கிடையில் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு கிராம அலவலர் ச.தில்லையம்பலம் அறிவித்துள்ளார். (24)




2003 இறுதித் தவணைக் காலப்பகுதியில் கரவெட்டி யா.விக்னேஸ்வரா கல்லூரிக்கு அதன் பழைய மாணவரும், தொழிலதிபருமாகிய எஸ்.கனகசபை அவர்களால் வழங்கப்பட்ட உதைபந்தாட்ட அணிக்கான பாதஅணி வழங்கும் நிகழ்வில் - பிரதம விருந்தினராக கலந்துகொண்ட லயன்ஸ். க.தணிகாசலம், உபாலி, பொன்னம்பலம், கல்லூரி அதிபர் வி.சிவ சிதம்பரம், பாடசால அபிவிருத்திச் சங்கச் செயலாளர், பிரதி அதிபர் ஆகியோ ரைப் படத்தில் காணலாம். (12)

# வேலையற்ற பட்டதாரிகள் அனைவரும் உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளவும்

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் அனைவரும் யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் - உடன் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். இன்றைய அரசியல் சூழ்நிலையில் வேலை வாய்ப்பு தொடர்பான முக்கியமுடிவுகள் சங்கத்தால் எடுக்கப்படவுள்ளது.

எனவே, இந்த அறிவித்தலுக்கு அமைவாக அனைவரையும் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்க உபதலைவர் கேட்டுள்ளார்.

இது பற்றி மேலும் கருத்து தெரிவித்த சங்க உபதலைவர் பா. ஜெயதாசன் -

எமது கருத்துக்கள் தொடர்பாக யாழ்.மாவட்டத்தைப் பிரதிபலிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரியப்படுத்தியுள்ளோம். இவர்கள் இது பற்றி ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபடுவதாக எம்மிடம் கூறிவிட்டு. அசட்டைப் போக்கில் செயற்படுவதுடன், தமது கட்சி சார்ந்த நலனில் அதிக அக்கறை காட்டுவதுடன், எமது பட்டதாரிகளின் தேவைகளையும், காலவிரயத்தையும் பற்றி அவர்கள் சிந்திப்பவர்களாகத் தெரியவில்லை.

இறுதி முயற்சியாக நாம் எமது சொந்த முயற்சியால் திருமலை சென்று, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து, எமது நிலை பற்றி கூறி, அவரின் பதிலின் அடிப்படையில் அரசாங்கத்தை பிரதிபலிக்கும் நிர்வாக அலவலகத்தின் முன் தொடர்ச்சியான போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம்.

அவ்வாறான ஓர் போராட்டம் தொடங்கப்பட்டால், அதனால் ஏற்படும் விளைவுக்கு அதற்குரிய முழுப் பொறுப்பும் யாழ்.மாவட்டத்தைப் பிரதிபலிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும். சமாதான காலத்தில்கூட தாம் பிரதிநிதித்துவப்பட்ட மாவட்டத்தில் நின்று வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாதவர்கள் - எதிர்வரும் காலங்களில் மக்களாலும், எம்போன்ற சங்கங்களாலும் நிராகரிக்கப்படுவார்கள்.

எனவே, அரசியல் சூழ்நிலைமாற்றத்துக்கு அமைவாக நாம் செயற்பட உள்ளதால், தமது பதிவுகளை மேற்கொள்ளாத பட்டதாரிகளை உடன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளனர். (205)

# உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கப்படுகிறது

பளைப் பிரதேசத்தில் உழைப்பாளிகளை இழந்த 10 குடும்பங்களுக்கு - கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் நிதியுதவியுடன் சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

உழைப்பாளிகளை இழந்த 10 குடும்பங்களுக்கு 17 இலட்சம் ரூபா சுயதொழில் முயற்சிக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஊர்வணிகப்பற்று, கோயில் வயல் கிராமங்களில் உள்ளவர்களுக்கே, இந்தச் சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# மண் விநியோகம் தொடர்பாக 9 ஆம் திகதி முதல் புதியநடைமுறை

மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவிலுள்ள பகுதிகளில், மண் விநியோகம் தொடர்பாகப் புதிய நடைமுறை எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை உப அலுவலகமான தும்பளையில்வைத்து மண் விநியோகத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் நாட்கள் -

திங்கட்கிழமை - சங்கானை, சண்லிப்பாய், யாழ்ப்பாணம். செவ்வாய்க்கிழமை - கோப்பாய், நல்லூர், உடுவில். வியாழக்கிழமை - கரவெட்டி, தெல்லிப்பளை. வெள்ளிக்கிழமை - பருத்தித்துறை

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு இந்த நான்கு நாட்களிலும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இவை யாவும் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும். (17)

# ஞானச்சுடர் வாசகர் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றோர் விபரம்

தொண்டமனாறு - செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் வாசகர்போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்களின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

இ.வேல்குமார்(மானிப்பாய்), க.சதீஸ்குமார் (அச்சுவேலி), இ.திலக்ஷனா (சுன்னாகம்), துஷ்யந்தன் (கல்வியங்காடு), சி.அருளேஸ்வரி (கல்வியங்காடு) த.செந்தில்குமரன் (யாழ்ப்பாணம்), த.ஜெனிற்றா (மானிப்பாய்),

கௌரி சுரேசன் (புத்தூர்), திருமதி த.சிவலிங்கம் (யாழ்ப்பாணம்), செல்வி வ.அமரசிங்கம் (சுன்னாகம்), பா.சிந்துஜன் (அல்வாய்), பெ.நிரோஜன் (சுன்னாகம்), ர.தமயந்தி (சுன்னாகம்), ப.சந்திரபவானி (தெஹிவளை), க.நந்தினி (சுன்னாகம்), ச.கலையரசி (உரும்பிராய்), க.தர்ஷினி (மருதடி விநாயகர் அறநெறிப்பாடசாலை), ம.சிந்துஜா (சுன்னாகம்), க.அருந்ததி (சுன்னாகம்), த.சபேசன் (கொழும்புத்துறை).

இவர்களுக்குரிய பரிசில்கள் எதிர்வரும் 27 ஆம் திகதியன்று வழங்கப்படும்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : மோ.தமிழீசன்
முகவரி : 5 ஆம் வட்டாரம். நயினாதீவு

# துஷ்பிரயோக நடவடிக்கைகளைத் தடுக்க யாழ்ப்பாணத்தில் விசேட பொலிஸ் குழு

(யாழ்ப்பாணம்)

பெண்கள், சிறுவர்கள்மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோக நடவடிக்கைகளைத் தடுக்க, விசேட பொலிஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு - யாழ்ப்பாண் நகரம், மானிப்பாய், சுன்னாகம், இளவாலை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று - பெண்கள், சிறுவர்கள்மீது மேற்கொள்ளளப்படும் துஷ்பிரயோகச் செயற்பாட்டைத் தடுக்க கருத்துரைகள், சட்டவிதிகள் என்பவற்றை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இந்த செயற்பாட்டின் அடுத்தகட்டமாகக் கிராமம் கிராமமாகச் செனறு, துஷ்பிரயோக நடவடிக்கைகளைத் தடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பெண்கள், சிறுவர்கள் நலனகள் பாதுகாக்கும் பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த அமைப்பிற்குத் தற்போது திருமதி சில்வா பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.



## சிநேகிதியே

# தாயின் அரவணைப்பில் பிள்ளைகள்

உங்கள் பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றவேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா? ஒரு நிமிடம் - நீங்கள் பிள்ளையாக இருந்தபோது, உங்கள் பெற்றோர்களின் எத்தனை ஆசைகளை நீங்கள் நிறைவேற்றியிருக்கின்றீர்கள் என்று யோசியுங்கள்.

அவர்களின் அறிவுரைகளை எந்தளவுக்கு நீங்கள் பின்பற்றுகின்றீர்கள் என்று அலசி ஆராய்ந்து பாருங்கள். மற்றவர்களுக்காக மட்டுமே அவற்றை நீங்கள் பின்பற்றும் பட்சத்தில், மன்னிக்கவும்- பிள்ளை வளர்ப்புமுறையை நீங்கள் மாற்றிக்கொண்டே ஆகவேண்டும்.

எந்த ஒழுக்கத்தையும் தன் நல்லதுக்காகப் பின்பற்றக் கற்றுத் தருவதுதான் பெற்றோரின் முக்கிய கடமை.

பிள்ளைகளிடம் எதையும் மூடிமறைக்காதீர்கள். அவர்கள் எதிரே சண்டை போடாதீர்கள். அடம்பிடிப்பது, கோபப்படுவது, எதற்கெடுத்தாலும் அழுவது போன்ற எதிர்மறையான குணங்கள் பிள்ளைகளிடம்

பிள்ளைகளைக் கவனிக்கவே நேரம் இருப்பதில்லை என்ற புலம்பலோடு, தன் பிள்ளைகளை அம்மம்மாவிடம் விட்டுவிட்டு, வேலைக்குப்போகும் அம்மாக்களுக்கு, ஒரு முக்கியமான தகவல் - பிள்ளைகளுடன் எவ்வளவு நேரம் செலவழிக்கின்றீர்கள் என்பது முக்கியமல்ல, கொஞ்சநேரமாக இருந்தாலும், அதை எப்படி செலவிடுகின்றீர்கள் என்பதுதான் முக்கியம்.

பிள்ளைகளிடம் ஒரு சின்னப் பயிற்சியை அடிக்கடி நடத்துங்கள். தினசரி ஒரு வெள்ளைத்தாளை குழந்தையின் கையில் கொடுங்ளைப் பட்டியல் போட்டு, அதை எப்படிச் செய்யப்போகிறீர்கள் என்பதைச் சொல்லிக் கொடுங்கள். அவற்றைத் தவறாமல் முடித்துக் காட்டுங்கள்.

ஞாயிற்றுக்கிழமை அன்று ஆறு நாள் தாள்களையும் எடுத்து வைத்துக்கொண்டு, எவற்றை எல்லாம் நிறைவேற்றியிருக்கிறீர்கள் என்று கதையுங்கள். பின்னர் அதற்காகப் பாராட்டுங்கள், தவறுகளைத் திருத்த உதவி செய்யுங்கள். இதைச் செய்வதன்மூலம் இவர்கள் தமது வேலைகளைக் குறித்தநேரத்தில் ஒழுங்காகச் செய்வார்கள்.

ஒரு நிமிடம் உங்கள் பிள்ளைகளின் முகத்தை கனிவோடு உற்றுப்பாருங்கள், ஆதரவாகத் தொட்டுப்பேசுங்கள். இப்படித் தினமும் பத்துமுறையாவது செய்யுங்கள். “அம்மாவுக்கு எங்கள்மீது அக்கறை இருக்கின்றது” என்று குழந்தை நம்பி, உங்கள் பேச்சைத் தட்டுவதற்குத் தயங்கும்.

பிள்ளைகள் தவறு செய்யும்போது, அடித்து துன்புறுத்துவது மட்டுமல்ல, கடு

தவறைச் செய்யாது. பிள்ளை தவறு செய்த வுடன், பெரும்பாலான தாய்மார்கள் “நீ செய்வது எனக்குக் கொஞ்சம்கூட பிடிக்க வில்லை. உன்னோடு கதைக்கமாட்டேன். ஏன் இப்படி உயிரை வாங்கிறாய்?” என்று கத்துவது வழக்கம்.

அப்படி இல்லாமல் - ‘உன்னை எனக்குப் பிடிக்கும். நீ செய்கின்ற பிழையான காரியம்தான் எனக்குப் பிடிக்காது’ என்று அன்பாகச் சொல்லுங்கள்.

அடிக்கடி பிள்ளைகளை அரவணைத்து, உன்னை எனக்குப் பிடிக்கும் சின்னவிசயமாக இருந்தாலும், சரியாகச் செய்யும் போது, மனம் திறந்து பாராட்டுங்கள்.

தினமும் ஒருமுறையாவது பிள்ளைகளை ஊக்குவிப்பது மாதிரியான சொற்களைச் சொல்லிக்கொண்டிருந்தால், பிள்ளைகள் மகிழ்ச்சியாவதோடு, அந்த மகிழ்ச்சி நீடித்துக்கொள்ளும் பொருட்டு - தவறுகளைக் குறைத்துக்கொள்ள தானாகவே வழி கண்டுபிடிப்பார்கள்.

மையான சொற்களால் திட்டுவதுகூட கூடாது.

பிள்ளைகள் தவறு செய்தவுடன் சில நொடிகள் அமைதியாக இருங்கள். பிள்ளை செய்ததில் உங்களுக்கு உடன்பாடில்லை என்பதைப் புரியவை யுங்கள். பின் “எங்கேயாவது கெட்டுத் தொலைந்து போ” என்று விட்டுவிடாமல் அதேசெயலைச் சரியாகச் செய்யச் சொல்லுங்கள்.

அடுத்தமுறை - பிள்ளை அந்த

வளர்வது இந்தத் தருணங்களில்தான்.

ஒரு விடயத்தைச் செய்தே ஆகவேண்டும் என்று பிள்ளையிடம் அடம்பிடிக்கும் பெற்றோர்கள் இங்கு அதிகம். பரீட்சையில் 100 மதிப்பெண் வாங்கவேண்டும் என்று மிரட்டும் பெற்றோர் - ஏன் 100 மதிப்பெண் வாங்கவேண்டும், அது பிள்ளைக்கு எந்தவகையில் பெருமை சேர்க்கும் எனபதைப் புரியவைப்பது இல்லை.

பிள்ளையிடம் ஒரு வேலையைச் சொல்வதற்கு முன், அதனால் ஏற்படும் பயன்களைப் பிள்ளைக்குப் புரியவைத்தால், நீங்கள் விரும்பியதைவிடவே கச்சிதமாக முடித்து அசத்துவார்கள்.

எந்த நல்ல விடயத்தையும் பிள்ளைகளுக்குச சொல்லிக் கொடுப்பதற்கு முன் - நீங்கள் அதைப் பின்பற்றவேண்டும். தொலைக்காட்சி பார்த்துக்கொண்டே சாப்பிடாதே என்று எத்தனை தடவைகள் சொல்லி இருக்கின்றேன் என்று கத்தும் பெற்றோர் - தாங்கள் அதே தவறைச் செய்வார்கள். தமக்கு மட்டும் பெரிசா சொல்லவந்திட்டா. அம்மா செய்யிறதெல்லாம் தப்பில்லையா? என்று யோசிப்பார்கள். பிறகு அதைத் திருத்தவேமுடியாது.

கள்.

அந்த வாரத்திற்கான பிள்ளைகளின் குறிக்கோள் என்ன என்பதை எழுதச் சொல்லுங்கள். ஒரு நிமிடத்துக்குள் எழுதிமுடிக்கவும், வாசிக்கவும் முயற்சி கொடுங்கள்.

உதாரணமாக - கணக்குப் பாடத்தில் நிறைய மதிப்பெண் வாங்கவேண்டும். தொலைக்காட்சி பார்க்காமல் தினமும் 30 நிமிடம் படிப்பேன்.

பேச்சுப்போட்டியில் முதலாவதாக வரவேண்டும். அதுக்குத் தொடர்ந்து பயிற்சி எடுப்பேன்.

நான் ஒல்லியாக இருக்கின்றதாக நண்பர்கள் கேலி செய்கிறார்கள்.

அதனால், தினமும் அம்மா கொடுக்கிற சாப்பாட்டை மிச்சமில்லாமல் சாப்பிடுவேன்.

இப்படியாக இருக்க வேணடும். நீங்களே முன்மாதிரியாக, உங்களின் அந்த வார வேலைக



# குழந்தைகளுக்குப் பசுப்பால் கொடுக்கலாமா?



குழந்தைகளின் வளர்ச்சிக்கும் ஆரோககியத்திற்கும் தேவையான உணவுகளை அந்தந்த காலகட்டங்களில் வழங்கியே ஆகவேண்டும்.

முதல் காலகட்டத்தில் அவைகளுக்கு தாய்ப்பால் அவசியம். தாய்ப்பால் தவிர வேறு பால் குடிக்கும் குழந்தைகளுக்கு கொதிக்கவைத்து ஆறிய தண்ணீர கொடுத்து வரவேண்டும்.

குழந்தைகளுக்கு முதல் ஒரு வருடம் வரை கொடுக்கும் உணவுகள் மிகுந்த சத்து நிறைந்ததாக இருக்கவேண்டும்.

குழந்தைக்கு ஆறு மாதம் கழிந்த பின்பே அதன சமிபாட்டுச் சக்தி ஓரளவு மேம்படும்.

அதன் பின்புதான் வேறு திரவ உணவுகள், இலேசான உணவுகளைக் கொடுக்கத் தொடங்கவேண்டும்.

புதிய உணவினை கொடுக்கும்போது, ஒரு வகை உணவை ஒரு தடவைமட்டும் கொடுத்துவிட்டு, குழந்தையின் உடல் அதனை எப்படி ஏற்றுக்கொள்கின்றது என்று பாருங்கள். பிரச்சினை எதுவும் இல்லை என்றால் தொடர்நது அதனை கொடுதது வரலாம்.

புதிய உணவினை அறிமுகம் செய்யும்போது, குழநதை அதனை சாப்பிட மறுத்தால், நிர்ப்பந்தம்செய்து உணவைத் திணிகக வேண்டாம். மறுநாளும் அதனைக் கொடுத்துப் பாருங்கள். மீண்டும் மறுத்தால், 15 நாட்கள்வரை அந்த உணவைக் குழந்தையின் கண்களிலே காட்டவேண்டாம்.

குழந்தைகளுக்காகத் தயாரிக்கப்படும் தானிய மாவுகளில் - இரும்புச்சத்து அதிகம் இருக்கும். அதனைப் பாலிலோ அல்லது கொதித்து ஆறிய நீரிலோ கலநது வழங்கவேண்டும்.

அரிசி வகை உணவுகளை கொடுக்கத் தொடங்கும்போது, முதல்முதலில் கஞ்சியைக் கொடுக்கவேண்டும்.

பருப்பு வகைகளில் நிறையச் சத்துக்கள் உள்ளன. அதனால் பருப்பினை நன்றாக வேகவைத்து, குறைந்தளவில் கொடுக்கத்தொடங்கி, பின்பு அதிகரியுங்கள்.

கொதிக்கவைத்து ஆறாத தண்ணீரையோ, காய்ச்சாத பசுப்பாலையோ எக்காரணத்தைக் கொண்டும் குழந்தைக்குக் கொடுத்துவிடாதீர்கள்.

ஒரு வயதுக்கு முன்பு குழந்தைகளுக்குப் பசுப்பால் கொடுத்தால் சமிபாட்டுக் கோளாறு ஏற்படக்கூடும். அதுமட்டுமன்றி, பலவிதமான அலர்ஜியையும் தோற்றுவிக்கும்.

குழந்தைக்குப் பசி குறைவாகவே இருக்கும். அதனால், அதிகளவு உணவினை கொடுக்க முயற்சிக்கவேண்டாம். குழந்தை விழித்து சிறிது நேரம் ஆகும்போதோ, நன்றாக விளையாடி உற்சாகமாக இருக்கும்போதோ உணவு வழங்குவது சரியாக இருக்கும்.

# முகப்பருக்களால் தொல்லையா?



இளமைப் பருவத்தில் முகப்பரு ஒரு தொல்லையேயாகும். அவற்றைப் போக்குவதற்குப் பலவிதமான மருந்துகள் உள்ளன. அத்துடன், உணவுப் பழக்கவழக்கங்களிலும் கவனம் தேவை.

பூசு மஞ்சல், இலுப்பைப் புண்ணாக்கு, கஸ்தூரி மஞ்சள் ஆகியவை ஒவ்வொன்றும் 50 கிராமும், 100 கிராம் சீகைக்காயையும் சேர்த்து இடித்துத் தூளாக்கிக்கொள்ளவும்.

சுத்தமான பன்னீரில் சிறிதளவு தூளை ஊற வைத்து, முகப்பருக்கள் உள்ள இடங்களில் நன்றாகத் தடவி - 2 மணிநேரம் ஊற வைக்கவும். பிறகு வெந்நீரால் அலம்பி விடலாம்.

இவ்வாறு செய்துவந்தால், சில நாட்களிலேயே பருக்கள் மறைந்து, மாலை நேர மஞ்சல் சூரியனைப்போல் முகம் பளபளப்பைப் பெற்று அழகாயிருக்கும்.

பல வருடங்களாகப் பரு, கரும்புள்ளியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் உள்ளுக்கு மருந்து சாப்பிட்டால்தான் நிரந்தரப்பலன் அடையலாம்.

விதை நீக்கியெடுத்த கடுக்காய், விதை நீக்கிய தான்றிக்காய், விதை நீக்கிய நெல்லிக்காய், உலர்ந்த ரோஜாஇதழ், நிலவாகை இலை ஒவ்வொன்றிலும் 50 கிராம், சர்க்கரை 100 கிராம், தேன் 250 கிராம், நெய் 100 கிராம் அகியவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

முதலில் குறித்த மூலிகைகளைக் காயவைத்து, மாவாக்கி, அத்துடன் சக்கரை, நெய், தேன் ஆகியவற்றைக் கலந்துவைத்துக்கொண்டு, தினமும் காலை -மாலை உணவுக்குப் பின் அரை மணிநேரம் கழித்து நெல்லிக்காயளவு சாப்பிடவேண்டும். இதனால் பித்தம் குறைந்து இரத்தம் சுத்தமாகும். மலச்சிக்கல் நீங்கி கரும்புள்ளி நிரந்தரமாக நீங்கிவிடும்.

# மணப்பெண்ணாகும் நேரம்...



திருமணநாள் குறித்தவுடனேயே ஒரு பரபரப்பு - திருமண வீட்டைச் சேர்ந்தவர்கள் அனைவரையுமே தொற்றிக்கொள்ளும். தான் மிகுந்த அழகுள்ள பெண்ணாக மணப்பந்தலில் தோற்றம்தரவேண்டும் என்பதை விரும்பாத பெண் யார்? சற்றுச் சுமாராக உள்ள பெண்ணானால்கூடத் தன் தோற்றத்தை மிகவும் மேம்படுத்திக் காண்பிக்கத்தானே விரும்புவாள்.

இதனால், ஏற்படும் பதற்றத்தினால், மணப்பெண்ணின் இயல்பான அழகும், ஆரோக்கியமும் பாதிக்க ஏற்படக்கூடும். பதற்றத்தைக் குறைத்து, அழகுடன், ஆரோக்கியத்தை ஆயுர்வேத முறையில் கூட்டச் சில ஆலோசனைகள் -

'மணப்பெண்ணாகப்போகும் ஒவ்வொரு பெண்ணும், முதலில் ஒரு கைதேர்ந்த அழகுக் கலை நிபுணரை அணுகி - தங்களின் சருமம், கூந்தல் போன்றவைகளின் வகையைக் கண்டறிவதுடன், தங்களின் தோற்றத்திற்கும் உடல்வாகிற்கும் ஏற்ப எந்தெந்த வகையான தலை அலங்காரங்கள், முக ஒப்பனை போன்றவைகளை, அவர் ஆலோசனையுடன் தேர்வு செய்யவேண்டும். கணினியில் பார்த்துத் தேர்வு செய்யும் வசதியிருந்தால், அதன்படியும் தேர்வு செய்துகொள்ளலாம்.

மணப்பெண்ணாக்கும் சடங்குகள் ஆரம்பிக்கும்முன்பே (திருமணத்திற்கு 10 முதல் 15 நாட்களுக்கு முன்பே) வெயிலில் அலைவதை முழுமையாகத் தவிர்க்கவேண்டும். நல்ல சத்துள்ள காய்கறி, கீரைகள், பழங்களைத் தவறாமல் உணவில் அன்றாடம் சேர்த்துக்கொள்வது அவசியம். இரவில் அளவான தூக்கம் அவசியம். பகலில் தூங்குவதைத் தவிர்த்தல் நலம். பகல் தூக்கம் உடல் எடையைக் கூட்டும்.

தினமும் உடலுக்கு எண்ணெய் மசாஜ்செய்துகொள்வதுடன், வாரம் இரண்டு முறை தலைக்கும் எண்ணெய் தேய்த்து தலைகுளிக்கவேண்டும். இதனால் தலைமுடி அழுக்கு சேராமல் சுத்தமாக இருக்கும். சூரிய வெப்பத்தினால் உடலில் ஏற்பட்ட வெப்பம் தணியும், சருமம் சுத்தமாகும். ஒலிவ் எண்ணெய் அல்லது சுத்தமான தேய்காய் எண்ணெய்யை உடலில் தடவி மசாஜ் செய்து, பதினைந்து நிமிடங்கள் அப்படியே ஊறவிட்டு பின்பு வெதுவெதுப்பான நீரில் குளிக்கலாம்.

# இவ்வளவுதானா முட்டை



முட்டையில் சோடியம் உப்பு அதிகம். ஒரு முட்டை சாப்பிடும் போது அரை தேக்கரண்டி உப்பை விழுங்கிவிட்டதாக அர்த்தம்.

மஞ்சல் கருவில் கொலஸ்ட்ரோலும், வெள்ளைக் கருவில் உப்பும் நிறையவே இருப்பதால், இரண்டுமே உடல் நலத்துக்கு கேடுவிளைவிக்கும் அம்சங்கள் தான். மற்றப்படி முட்டையில் உளள புரதச்சத்தும் 13.3 மில்லி கிராம் அளவில்தான் உண்டு.

முட்டையை நீரில் வேகவைப்பதாலோ, எண்ணெய்யில் பொரிப்பதாலோ விற்றமின் என்ற சத்து அழிந்துவிடுகிறது.

வம்சாவளியாக இதயநோய் உள்ளவர்களுக்கு முட்டை ஆகவே ஆகாது.

துவரை, கொத்துக்கடலை, உழுந்து, பயத்தம் பருப்பு போன்ற பருப்பு வகைகளில் - முட்டையைவிட 1.5 மடங்கு புரதச்சத்து உள்ளது.

நிலக்கடலையிலே இந்த சத்து 2 மடங்கு உள்ளது.

ஒரு முட்டையில் 30 மில்லி கிராம் கல்சியம் கிடைக்கிறது. ஒரு கைப்பிடி அளவுள்ள கீரையில் இந்தக் கல்சியம் சத்து இதனைவிட மூன்று மடங்கு அதிகம்.

# முதுகு வலிக்கிறதா?

* முகம் தரையில் படும் அளவுக்குக் கவிழ்ந்துபடுங்கள். இரு கைகளையும் இரு பக்கமாகச் சேர்த்து வையுங்கள். அப்படியே படுத்துக்கொண்டு, மேல்பகுதியிலுள்ள உடல் அழுத்தத்தை எல்லாபகுதிகளுக்குமாகப் பரவவிடும் அளவுக்கு உடலை இயக்குங்கள். வலி கட்டுப்படும்.
* கவிழ்ந்து படுத்துக்கொண்டு வலியுள்ள முதுகுப் பகுதியில், இளம் சுடுநீரில் நனைத்த துவாயால் துடையுங்கள். இந்த உதவிக்கு இன்னொருவரை வைத்துக்கொள்ளுங்கள்.
* வலி அதிகமுள்ள இடத்தில், சுடுநீரில் நனைத்த துவாயை மூன்று நிமிடம் வையுங்கள். பின்பு துவாயைக் குளிர் தண்ணீரில் (ஐஸ்) நனைத்து, முதலில் செய்ததுபோல் மீண்டும் செய்யுங்கள்.
* கவிழ்ந்து படுத்துக்கொள்ளுங்கள். 'மசாஜ்' செய்யத் தெரிந்தவரைப் பயன்படுத்தி முறைப்படி 'மசாஜ்' செய்ய வையுங்கள். இதன் மூலம் வலியைத் தாங்கிக்கொள்ளும் சக்தி உடலுக்குக் கிடைக்கும். வலியும் குறைந்து விடும்.
* பதற்றம் மூலமாகவும் தசையிறுக்கம், உடல் வலி தோன்றும். அவ்வாறான நேரங்களில மூச்சை நன்றாக உள்ளிழுத்து, வெளியே விடுங்கள். இதன்மூலம் பதற்றத்தைக் குறைத்து வலியைக் கட்டுப்படுத்தலாம்.
* தண்ணீருக்குக்கூட உடல் வலியைக் கட்டுப்படுத்தும் சக்தியுண்டு. மூன்று கப் தண்ணீரைத் தொடர்ந்து குடித்தால், சில வகை உடல் வலி கட்டுப்படும். எபோதும் உடலில், தேவையான அளவு தண்ணீர சக்தி இருந்துகொண்டிருக்கவேண்டும்.



பூண்டை இடித்து அரைத் தேக்கரண்டி அளவுக்கு எடுத்துக்கொள்ளுங்கள். அதில் 2 தேக்கரண்டி தேன் கலந்து தினமும் 2 நேரம் சாப்பிடுங்கள்.

தொடந்து உடல் வலி எற்படுகிறவர்களுக்கு இது நல்ல மருந்து.

# குடியைக் கெடுக்கும் குடிப்பழக்கம்

இன்றைய காலகட்டத்தில் சில குடும்பங்களிடையே பிரச்சினைகள் வரத்தான் செய்கின்றன. வாயில் கை வைக்குமளவிற்கு மிக அந்நியோன்னியமாயிருக்கும் தம்பதியினரையும் விட்டு வைக்காமல், பிரச்சினைகள் தலை விரித்தாடுவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

பொதுவாக மதுபானம் அருந்துதல் போன்ற தவறான பழக்கங்களை உடைய ஆண்களாலேயே, எமது சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் அதிகம் எனலாம்.

மது அருந்துதலைத் தமது உயிர்மூச்சாகக்கருதி, தாம் நேசிக்கும் மனைவியை துச்சமாகக்கருதும் அளவிற்கு மது அவர்களை ஆட்சி புரிகின்றது. சில சமயங்களில் காதலித்துத் திருமணம் புரிந்த மனைவியைக்கூட இவர்கள் மிகவும் மோசமானமுறையில் அடித்தல், துன்புறுத்தல், கெட்டவார்த்தைகளால் பேசுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள்.

ஏன்? இவ்வாறு அதிகம் மதுவினைப் பயன்படுத்துகின்றார்கள். ஒருசில ஆண்களைக் காரணம் கேட்டபோது, ஆண்கள் சொன்ன பதில் - உழைக்கும் பணம் குடும்பச் செலவிற்குப் போதவில்லை என்றும், மதுபோதையால் தமக்கு இருக்கும் பல்வேறு குடும்பப் பிரச்சினைகளை மறக்க முடிகின்றது.

அத்தோடு, தொழில் காரணமாகத் தனது மனைவியை வெகுகாலமாக பிரிந்து வாழவேண்டியிருக்கின்றது. தன்னுடைய பெண் பிள்ளைகளுக்கு நீண்டகாலமாகத் திருமணம் நிட்சயிக்கப்படாமையினாலும், இந்தக் கவலைகளை வெளியே சொல்லமுடியாமல் மனதிற்குள்ளே புதைத்து மறைப்பதற்கு எத்தனிக்கும் விதமாகக் குடிப்பதாகப் பலரும் கூறுகின்றார்கள்.

உண்மையில் வாழ்கையில் ஏற்படும் பிரச்சினைகள்-கவலைக்குரிய பிரச்சினைகளாக இருப்பினும், கவலைப்பட்டுக் கவலைப்பட்டு நாம் இந்த சமூகத்தில் சாதிப்பது தான் என்ன?

'குடி குடியைக் கெடுக்கும்' இந்தக் குடியினால் பல்வேறு தம்பதிகள் பிரிந்து வாழவேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இதன்போது சம்பந்தப்பட்ட ஆண்கள் தன் கையினாலேயே தன் வாழ்விற்கு மண் அள்ளிப்போடுவதை உணர்வதில்லை.

குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள், கவலைகள் காரணமாகவே குடிக்கின்றோம் எனக் காரணங்கூறும் இந்த ஆண்கள்-பெண்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை உணர மறுக்கின்றார்கள்.

பிள்ளைகளைத் தொடர்ந்து கல்விகற்கப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கமுடியாதநிலை. இதனால், பிள்ளைகளுக்கு கல்வியில் உள்ள நாட்டம் குறைந்து வருகின்றது. இதற்குக் குடிப்பழக்கத்தைப் பழகிய தகப்பனின் குறைபாடேயாகும்.

மதுபோதையில் அயலவர்களுடன், உறவினர்களுடன் ஏற்படும் பிரச்சினைகள் என்று பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு ஒரு பெண்ணும் முகம் கொடுக்கவேண்டிய சூழலிலேயே காணப்படுகின்றாள். இருந்தபோதிலும், பெண்ணானவள்-அனைத்திற்கும் முகம் கொடுத்து, அந்தச் சமயத்தில் தன்னை ஓர் நீதிபதியாகக் கருதி, அப்பிரச்சினைகளைத் தீர்த்து, இந்தச் சூழ்நிலையிலுள்ள இறுக்கத்தைக் குறைத்து விடுகின்றாள்.

மாறாக, ஆணைப்போல் அந்தப் பெண்ணும் - மன உறுதியில்லாது நிலைகுலைந்துபோனால், அந்தக் குடும்பத்தின் நிலை என்னவாகும்.

பிரச்சினைகளை பரஸ்பரம் தமது வாழ்க்கைத் துணையுடன் கலந்து ஆலோசித்து, இவர்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காணாது கவலைப்பட்டு குடிப்பதால் காண்கின்ற நன்மைதான் என்ன?

இதனால் கணவன் - மனைவி இடையே விரிசல் ஏற்படுகின்றது. இவர்களுக்கு சமூகத்தில் இருக்கின்ற நற்பெயர் கெடுகின்றது. உடலினுள் பலவிதமான நோய்கள் ஏற்பட்டு நாளடைவில் இவர்கள் மரணிக்கும் சந்தர்ப்பமும் ஏற்படுகின்றது.

இத்தனை கெடுதிகளையும் ஏற்படுத்தும் இந்த மது - ஒரு மனிதனுக்கு கவலையைத் தீர்க்கின்றதா? அல்லது கவலையை அதிகரிக்கின்றதா? இது ஆண்களின் தவறான அபிப்பிராயமும், அவர்கள் மதுவிற்கு அடிமையானதாலுமே இதிலிருந்து விடுபடாத சூழ்நிலையில் சிக்கித் தவிக்கின்றார்கள்.

வீட்டுக்கு வீடு வாசற்படி என்பதுபோல், கவலைகள் பிரச்சினைகள் இல்லாத வீடே இல்லை எனலாம். ஆனால், இவர் தங்கள் மனோதிடத்தினால் நாம் இந்தப் பிரச்சினைகளை முறியடித்து வென்று இவ்வுலகில் அனைவரும் மதிக்கக் கூடிய வாழ்வை வெற்றிகரமாக நகர்த்திச்செல்கின்றார்கள்.

பிரச்சினைக்குள்ளேயே தலையில் கை வைத்தபடி நாம் இருந்து, கவலையில் எம் மனதைப் பறிகொடுத்து இருப்போமாயின் என்றுமே அமைதி கிட்டப்போவதில்லை.

முதலில் மதுபோதைக்கு அடிமையானவர்கள் தமக்கு இருக்கும் பிரச்சினைகள் போலவே, ஏனையோருக்கும் உண்டு என்பதை ஏற்கப்பழகுதல் வேண்டும்.

பிரச்சினைகள், கவலை என்ற வட்டத்திற்குள் நிற்காது, அதைவிட்டு வெளியேவந்து, அதனை எவ்வாறு தீர்ப்பது என்று தீர்வு காணப்படவேண்டும். தனது வாழ்க்கைத் துணையுடனோ அல்லது திருமணம் புரியாதவர்கள் எனில் தனது பெற்றோர், சகோதரர்களுடன் கலந்துரையாடி தீர்வு காண முயற்சித்து அதன்படி வாழமுயலவேண்டும்.

பெண்களும், ஆண்கள் போலவே பிரச்சினைகள், கவலைகள், பணச்சிக்கல், வேலையின்மை என்றுகூறி, தாமும் ஆண்கள்போல் மதுபானம் அருந்துகின்றார்களா? ஏன் ஆண் போலவே சிந்தனைகள், சகல ஐம்புலன் உணர்வுகள் கொண்ட மனிதப்பெண்ணிடம் - ஏன் இதைச் செய்ய நினைத்தால் செய்யமுடியாது.

வெளிநாட்டுப் பெண்கள்போல் அல்லாது, எம் சமூகப் பெண்கள் கட்டுப்பாடு, கலாச்சார உணர்வுமிக்கவர்களாகவே இருக்கிறார்கள். சகிப்புத்தன்மையோடும், பொறுமை உணர்வோடும் தம் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து அவர்கள் தீர்வுகாணும்போது, ஆண்கள் மட்டும் ஏன் இலகுவில் பாதிப்புக்குள்ளாகி மதுவிற்கு அடிமையாகி நிற்கின்றார்கள்?.

# இந்த வார பலன்கள்

## 06.02.2004 - 12.02.2004 வரை (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| சுக் | செவ் ராகு | | சனி |
| யுரே | 06 பி.ப. 3.50 சிங-சந் 09 ப. 10.21 கன்-சந் | | சந் |
| சூ.புத நெப் | 11 பி.ப. 3.21 துல-சந் | | குரு |
| | | கேது | |

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் தொழில் முயற்சிகள் சிறப்பாக நடக்கும். எதிர்பார்க்கும் வருவாய் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கடன்தொல்லைகள் இருந்தால் அவை நீங்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன்காணப்படுவர். வீட்டில் சுப நிகழ்வுகள் நடைபெறும். இனபந்துக்கள், நண்பர்கள் வருகையால் குதூகலம் காணப்படும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். திருமணப் பேச்சுக்கள் கைகூட வாய்ப்புக்கள் கிட்டும். தேகாரோக்கியம் நன்றாக அமையும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் உதவியுடன் பல கருமங்களைச் சாதிப்பர். மக்களின் நன்மதிப்பையும் பெறுவர். வாடிக்கையாளர்கள் திருப்திடைவார்கள். மாணவர்களுக்கு கல்வியுன்னேற்றத்துக்கு இருந்த தடைகள்நீங்கும். முன்னேற்றமடைவர்.

### இடபம்

(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)



இவ்வாரம் இவர்களுக்கு நன்மையான பலன்கள் உண்டு. தொடங்கும் கருமங்கள் விரைவில் சித்தியாகும். குடும்பத்தில் புரிந்துணர்வும், கணவன் மனைவியிடையே அன்னியோன்னியமும் ஏற்படலாம். பிள்ளைகளால் பெருமைசேரும். நண்பர்கள் உதவி செய்வார்கள். தொழில் முயற்சிகள் நன்றாக அமையும். தேவைகேற்ப வருவாய்கிடைக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடைபெறஇடமுண்டு. அன்னிய தேசத்திலிருந்து பொருள்வரவு கிட்டும். தேகாரோக்கியம் அதிகம் பாதிப்படையாது. திருமணப்பேச்சுக்கள் சற்று தாமதத்தின்பின் முடிவுக்குவரும். காதல் விவகாரங்கள் கஷ்டத்தைத்தரும். உத்தியோகத்தர்கள் மனநிறைவுடன் செயலாற்றுவார்கள். உயரதிகாரிகள் உறுதுணையுடு தருவார்கள். வர்த்தகர்களுக்கு பொருட்கள் விற்பனையாகி போதிய இலாபம் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள், முதலீடுகள் செய்யப்படலாம். வாடிக்கையாளர்கள் அதிகம் வருவார்கள். மாணவர்களின் கல்வியில் உயர்ச்சி உண்டு.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )



இந்த வாரம் மிதுன ராசிக்காரர்களுக்கு சற்று பாதகமான பலன்களே தென்படுகிறது. திட்டமிட்டு செய்யப்படும் முயற்சிகள் தாமதமடையும். இடையூறுகளையும்தரும். குடும்பத்தவர்களுக்கு நிம்மதிக்குறைவு காணப்படும். செலவுகள் கட்டுக்கடங்காமல்போகும். வருமானம் குறைவாகவே இருக்கும். பிள்ளைகளால் தொந்தரவுகள் உண்டாகும். தேககமும் இடையிடையே பாதிப்படையும். குடும்பப் பெண்கள் மனவிரக்தியுடன் காணப்படுவார்கள். செய்கின்ற தொழிலில் அக்கறை குறைவாகவே இருக்கும். திருமணப்பேச்சுக்கள் இழுபறிநிலையிலிருக்கும். தீர்மானம் எடுப்பது கடினம். உத்தியோகத்தர்கள் மனவிரக்தியுடன் தொழில்செய்வர் இதனால் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்த நிலையைக் காட்டும். பணவரவுகுறையும். மாணவர்கள் ஊக்கக்குறைந்து காணப்படுவர்.

### கடகம்

(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)



இந்த இராசிக்காரர்களுக்கு தொழில்யாவும் நற்பலனைக் கொடுக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே புரிந்துணர்வு தென்படும். பணவருவாய் ஓரளவு நன்று. புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் வருகையால் வீட்டில் குதூகலமும் கலகலப்பும் இருக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். அத்துடன் புதிய பொருட்கள் வாங்கிச் சேர்ப்பதிலும் ஈடுபடுவர். திருமணப் பேச்சுக்கள் நிச்சயப்படுத்தப்பட்டு மங்களகருமம் நடைபெற இடமுண்டு. உத்தியோகத்தர்களுக்கு தொழில் விருத்தி ஏற்படும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் நல்ல லாபமும் வாடிக்கையாளர்களின் ஆசீர்வாதமும் கிட்டும். வங்கி நிலையும் நன்று. மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவர். பரீட்சையில் சித்தி, பாராட்டுகள் உண்டு.

### சிங்கம்

(மகம, பூரம், உத்தராடம் 1 ஆம் கால்)



சிங்க இராசியினருக்கு இவ்வாரம் நன்மை தீமை கலந்த பலன்கள் காட்டும். தொடங்கும் கருமங்கள் தடை தாமதத்தின்பின் நிறைவு பெறும். தொழில் முயற்சிகளில் கஷ்டங்கள், சிரமங்கள் கூடுதலாக இருகக்கும். வருவாயும், செலவும் சரிக்குச்சரி சமமாக இடம்பெறும். குடும்பத்தில் சச்சரவுகள், நிம்மதியின்மை காட்டும். குடும்பத்தேவைகளைப் பூர்த்திசெய்வதில் பெண்கள் கஷ்டப்படுவார்கள். திருமணப்பேச்சுக்கள் இழுபறி நிலையிலிருக்கும். வெளிநாட்டுப் பிரயாணங்கள் கைகூடுவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளுவும், கஷ்டமான வேலைகளைச் சமாளிக்கவேண்டியும் இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் குன்றும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவேண்டும். மாணவர்கள் பரீட்சையில் பாதிப்படைவார்கள். ஊக்கம் தேவை.

### கன்னி

(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)



கன்னி இராசியில் பிறந்தவர்களுக்கு உன்னதமான பலன்கள் நடக்கும். தொழில் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். பணவருவாயும் நன்கு சிறப்படையும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான நிலை இருக்கும். பிள்ளைகளால் மதிப்பும், கௌரவமும் உயரும். சுபகாரிய நிகழ்வுகள் ஏற்பட இடமுண்டு. குடும்பப்பெண்கள் திருப்திகரமாகக் காணப்படுவர். சகோதரர்களாலும் உதவி உண்டு. தேகசௌக்கியம் பாதிப்படையாது. மங்களவாழ்வை எதிர்நோக்குவோருக்கு கருமம் கைகூடி மகிழ்ச்சியுடன் விளங்குவர். தூரதேசப் பிரயாணங்களும் கைகூட வசதியேற்படும். உத்தியோகத்தர்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவர். உயரதிகாரிகளின் பாராட்டுக்களும் கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். நிகர லாபம் ஏற்படும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவர்.

### துலாம்

(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)



இவர்களுக்கு சற்றுத் தீமையான பலன்கள் காட்டும். தொழில் முயற்சிகளில் இழுபறிகள் காட்டும். குடும்ப அங்கத்தவர்களிடையே பிணக்குகள் தோன்றும். மனைவி மக்களால் செலவுகள் அதிகரிக்கும். வரவிலும் செலவு கூடுதலாகக் காட்டும். தேக அசௌக்கியம் காரணமாக வைத்தியச் செலவுகளும் தவிர்க்கமுடியாமலிருக்கும். பெண்கள் தேவையறிந்து செலவுகளை மேற்கொள்ளவேண்டும். வீண்விரயங்களைத் தவிர்த்தல் நன்று. பிரயாணங்களிலும் செலவு கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வீண் அலைச்சலும் சிரமங்களும் தோன்றும். பொறுமையாகத் தமது பணிகளைச் செய்யவும். வியாபாரிகளுக்கு நஷ்டத்திலேயே தொழில் நடக்கும். கடன்களை வசூலிக்கமுடியாமல் திண்டாடுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமின்மை காணப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்பாக இராது.

### விருச்சிகம்

(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)



இந்த இராசியினருக்கு தொழில் முயற்சிகளில் சிக்கல் தோன்றும். மறைமுக எதிர்ப்புக்களால் வீண்சச்சரவுகள் ஏற்படலாம். குடும்பத்தில் ஓரளவு சுமுகநிலை காட்டும். எனினும் வருவாய் குறைவாகவே இருக்கும். தேவைக்கேற்ப செலவுசெய்தால் பிரச்சனைகள் ஏற்படாது. குடும்பப் பெண்கள் நிதானத்துடன் நடந்துகொள்ளவேண்டும். திருமணப் பேச்சுக்கள் தள்ளிப்போகும். உத்தியோகம் வகிப்பவர்களுக்கு பல சிரமங்கள் இருப்பினும், நிதானமாகத் தமது பணியை ஆற்றினால் நன்மை உண்டு. இடமாற்றங்கள் சிறப்பாக இராது. வர்த்தகர்கள் தமது பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்குவர். வங்கிக் கடன் உதவிகள் இழுபறிநிலையில் இருக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை செலுத்தினாலன்றி முன்னேற்றம் கிடையாது.

### தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)



இவர்களுக்கு இந்த வாரம் பல நன்மையான பலன்கள் காட்டும். எடுக்கும் கருமங்கள் யாவும் சித்தியைக் கொடுக்கும். குடும்பத்தினரிடையே ஒற்றுமையான கருத்துக்கள் அதிகமாக இருக்கும். பொருளாதார நிலை தேவைக்கேற்ப திருப்தியாக இருக்கும். குடும்பப் பெண்களிடையே தீர்க்கமான முடிவுகளும், நற்சிந்தனைகளும் தென்படும். தேகாரோக்கியம் தளம்பலின்றி நன்றாக இருக்கும். திருமணப் பேச்சுக்கள் விரைவில் நிச்சயிக்கப்படலாம். இயந்திரத் தொழில் செய்வோர் கூடிய நன்மை பெறுவர். உத்தியோகத்தர்கள் சிறப்பாகப் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெறுவர்.

சிலர் தொழில் சம்பந்தமாக பிரயாணம் செய்ய நேரிடும் வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். பணப்புழக்கம் கூடுதலாக இருக்கும். மாணவர்கள் பரீட்சைகளில் கூடிய மதிப்பெண்களைப் பெறுவர்.

### மகரம்

(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)



மகர இராசியினருக்கு இந்தவாரம் நன்மையான பலன்கள் கூடுதலாக இருக்கும். தொடங்கும் தொழில்கள் யாவும் வெற்றியைத்தரும். குடும்பத்தில் ஒன்றுமையும் ஐக்கியமும் பண்பாடுகளும் சிறப்பாக இருக்கும். பணவருவாய் குறைவில்லாமல் கிடைக்கும். சிலருக்கு உல்லாசப் பிரயாணங்கள் அமையலாம். வீட்டில் சுப நிகழ்வுகள் நடைபெறலாம். கடன் தொல்லைகள் இருப்பின் அவை நிவர்த்தி செய்யப்படும். தேகசுகம் பொதுவாக நன்று. குடும்பப் பெண்கள் மனப்பூரிப்புடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் நன்மையான முடிவைத்தரும். தூரதேசப் பிரயாணங்களும் கைகூடலாம். உத்தியோகத்தர்கள் பணிகளை சிறப்பாகச் செய்து முன்னேற்றமும் பாராட்டும் பெறுவர். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். வர்த்தகர்கள் தமது முதலீடுகளை விற்பனைசெய்து நல்ல பணம் சம்பாதிப்பர். மாணவர்களுக்கு முன்பிருந்த தடைகள் நீங்கும்.

### கும்பம்

(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )



கும்ப இராசியில் பிறந்தவர்களுக்கு தொழில்ரீதியான மாற்றங்கள் உண்டாகும். எல்லாக் கருமங்களிலும் வெற்றிகிடைக்கும். குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும். பணவருவாய்க்கேற்ப செலவுகளை அமைத்துக் கொள்வது நன்று. இல்லையேல் செலவுகளுக்காக கடன்படும்நிலை ஏற்படும். கணவன் மனைவியிடையே சிறு சச்சரவுகள் தோன்றி மறையும். நண்பர்களாலும், பிள்ளைகளாலும் உதவிகள் உண்டு. குடும்பப் பெண்கள் நிதானத்தைக் கடைப்பிடித்தால் நன்மைதரும். உத்தியோகத்தர்களுக்கு உயரதிகாரிகளினால் சில தொல்லைகள் வந்துசேரலாம். பொறுமையைக் கடைப்பிடிப்பது நன்மைதரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராகவே இருக்கும். வாடிக்கையாளர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்வது நன்று. மாணவர்கள் கல்வியில் உயர்ச்சியடைவார்கள். கூடிய சித்திகளையும் பெறுவர்.

### மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)



இவர்களுக்கு இந்தவாரம் நற்பலன்களுக்கு இடமில்லை. எடுக்கும் கருமங்கள் இழுபறிகள் தாமதங்களையே காட்டும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் வாக்குவாதங்கள் ஏற்படலாம். நிம்மதிக் குறைவும் மனவிரக்தியும் எற்படும். செலவுகள் கட்டுக்கடங்காமல் உயர்ந்து செல்லும்.

அயலவர்களால் இன்னல்கள் தோன்றலாம். குடும்பப் பெண்கள் எதிலும் அவதானத்துடன் செயற்படுவது நல்லது .கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் தலைதூக்கம். ஏமாற்றுக்காரர்களைப்பற்றிய அவதானம் தேவை. திருமண முயற்சிகள் தோல்வியிலேயேமுடியும். வெளிநாட்டுப் பிரயாணத்தை நோக்குவோர் ஏமாற்றப்படுவார்கள். தனித்தொழில் செய்வோருக்கு கவலைகள்தரும். உத்தியோகத்தர்கள் வீண் குறைகள் கேட்க நேரிடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரிகளுக்கு தொழில் மந்தமாகவே இருக்கும். முதலீடுகள் விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கும். மாணவர்கள் தமது முய்றசிக்கேற்ற முன்னேற்றமடைவார்கள்.

---

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி - III - சிவா

# தொடரும் அகதி வாழ்வின் அவலங்கள்...

(நேற்றைய தொடர்ச்சி)

என்ன உன்ரை அப்பர் வெளிநாட்டிலை இருக்கிற மாப்பிள்ளையளுக்கு, இஞ்சை பொம்பிளை பார்த்து அனுப்புகிறார். உனக்கு எப்ப கல்யாணம்? என்று அந்த நண்பன் அடுத்த கேள்வியை கேட்டபோது - உண்மையிலேயே மகேந்திரன் அதிர்ச்சியடைந்து விட்டான்.

அப்போதுதான் அவனுக்கு எல்லாம் விளங்கியது. தன்னை பணம் காய்க்கும் மரமாகவே தன் பெற்றோர்கள் பார்த்திருக்கிறார்கள் என்ற உண்மை அவனுக்கு தெரிந்தது. ஊருக்கெல்லாம் பெண்பார்த்து கல்யாணம் செய்து வைக்கும் தனது தந்தை, 38 வயதாகியும் தனக்குக் கலியாணம் செய்துவைக்க முயலாததன் உள்நோக்கமும் அவனுக்குப் புரிந்தது. தனக்கென்று ஒரு வாழ்க்கைவந்தால், தங்களது வெளிநாட்டு வருவாய் தடைப்பட்டுப் போய்விடும் என்று எண்ணிய தன் பெற்றோரின் கீழ்த்தரமான எண்ணத்தை நினைத்து அவன் ஆத்திரப்பட்டான்.

அதற்குப் பின் இங்கிருக்க அவன் விரும்பவில்லை. 'பெத்த பிள்ளைக்கு பொய்சொல்லி காசுபறிக்கும் நீயும் ஒரு அப்பாவா' என்று தந்தையின் முகத்தில் காறித்துப்பிவிடடு, விமானப் பயணச்சீட்டை மாற்றிக்கொண்டு - தங்கைமாரைக்கூடப் பார்க்காமல் அன்றே பிரான்சுக்குத் திரும்பிவிட்டான்.

1993 ஆம் ஆண்டு 'புகலிடவாழ்வின் முரண்பாடுகள்' என்ற தலைப்பில் பாரிஸ் தமிழன் பத்திரிகையில் இதுபோன்ற விடயங்களை நான் எழுதிக்கொண்டிருந்தவேளையில், என்னைத் தேடிவந்த மகேந்திரன் தனுடைய இந்தத் துயரக்கதையைச் சொல்லி அழுதான்.

அவன் சொன்னவற்றை உறுதிப்படுத்துவதற்காக அவன் தங்கியிருந்த கிறித்தய் அகதி முகாமிற்குச் சென்று, அவனது நண்பனான மலாங்கையும் நான் சந்தித்திருந்தேன்.

தேவைக்கதிகமாக அனுப்பப்படும் பணம்- அன்பை, பாசத்தை, உறவை எல்லாம் அழித்து சமூகத்தை நாசப்படுத்திவிடும் என்பதை நான் அவனுக்கு எடுத்துச்சொல்லி, போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் புனர்வாழ்வுக்கு உதவும்படியும் ஆலோசனை கூறியிருந்தேன்.

ஆனால், பெற்றோர் தனக்குச் செய்த துரோகத்தை மறக்கமுடியாமல் மகேந்திரன்- குடிக்கும், போதைமருந்துப் பழக்கத்திற்கும் அடிமையாகியிருந்ததாகவும் - அடிக்கடி விபச்சார விடுதிகளுக்குச்சென்று வந்ததாகவும் அவன் வேலைசெய்த உணவுவிடுதி முதலாளியின் உதவியுடன் நடைபெற்ற அவனது இறுதிச் சடங்கின்போது என்னைச் சந்தித்த 'மலாங்கு' சொல்லிக் கவலைப்பட்டான்.

இன்றும் என் மனநிழலில் நிற்கும் மகேந்திரனைப் போல் - தனது அக்காவின் திருமணத்துக்கு சீதனம் கொடுப்பதற்காக, இரவு பகலாக ஓய்வில்லாமல் உழைத்து, வேலை நேரத்திலேயே மாரடைப்பால் உயிரிழந்து போன - பாலச்சந்திரன் என்ற 30 வயது இளைஞனின் கதையும் சொல்லப்படவேண்டிய ஒன்று.

(தொடரும்)

---

## கும்பாபிஷேகம்

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆலயத்தின் கும்பாபிஷேகம் நேற்று அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட விக்கிரகம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துசெல்லப்பட்டது. இதற்குரிய அனுமதி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மட்டுமே வழங்கப்பட்டது. (72)

## கணினிக்கற்கைநெறிக் கருத்தரங்கு

சுன்னாகம் றோட்டறிக் கழகமானது, கொம்பியூட்டர் எக்ஸ்பிறசின் ஆதரவுடன் நடத்தும் கணினிக் கற்கைநெறிக் கருத்தரங்கு, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (72)

## சூரிய சக்தி மின்கலம் அன்பளிப்பு

கண்டாவளை பிரதேசத்தில் உள்ள நாகேந்திரவித்தியாலயத்திற்கு, 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சூரிய சக்தி மின்கலம் ஒன்று இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகயின் பகல் நேர கற்பித்தலை முடித்துகொண்டு, 'இரவுநேர கற்பித்தலிலும் ஆசிரியர்கள் ஈடுபடுவதாலும் 60 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இரவுநேர கல்வியை மேற்கொள்வதாலும் இவர்களின் நன்மைகருதி விசுவமடு பிரதேச அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் சூரியசக்தி மின்கலம் வழங்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்டு*
*அல்லவை செய்துஒழுகும் வேந்து.*
-திருக்குறள்.

## நமது நோக்கு

### மீளக்குடியேற்றம் தமிழர்களின் வாழ்வுரிமை

கடந்த இரு தசாப்த காலமாக இலங்கைப் படைத்தரப்பினால் இராணுவக் காவலரண்கள், சோதனைச் சாவடிகள், இராணுவமுகாம்கள், இராணுவத்தளங்கள் என - இராணுவ மையங்களை நிறுவுவதற்கென, வடக்கு - கிழக்கில் மேற்கொண்ட ஒவ்வொரு தாக்குதல் நடவடிக்கைகளின் போதும், அவர்களால் கைப்பற்றப்பட்ட மக்கள் வதிவிடப் பிரதேசங்களை மெல்ல மெல்ல ஆக்கிரமித்து, அங்கு வாழ்ந்த மக்களை இடம்பெயர்ந்தும், புலம்பெயர்ந்தும் திக்குத்திசையின்றி உயிர்பாதுகாப்புக்காக மட்டும் ஓடவைத்த அநியாயம் நிகழ்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதுவும், 1995 இன் இறுதிப்பகுதியில் நடைபெற்ற சூரியக்கதிர் இராணுவத் தொடர் நடவடிக்கையின் கொடுமையை தாங்கமாட்டாது யாழ்.குடாநாட்டு மக்கள் பல லட்சம் பேர், பச்சிளம் குழந்தைகள் உட்பட பால் மற்றும் வயது வேறுபாடின்றி ஒரேநாளில் தத்தம் பாரம்பரிய வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்த வரலாற்றுநிகழ்வினைத் தொடர்ந்து, குடாநாட்டை ஆக்கிரமித்து நிலை கொண்ட படையினர் அதனைத் தமது சொத்தாக நினைத்து தம்மிஷ்டப்படி துவம்சம் செய்து, தமது பாரிய தளமாகவே மாற்றி ஆடிய ஆட்டமும், அடித்த கொட்டமும் தமிழ்மக்களின் மனங்களில் என்றைக்கும் ஆறாத ரணங்களாகவே இருக்கும்.

எத்தனை வீடுகளை, பாடசாலைகளை, மதவழிபாட்டு நிலையங்களை மனித உணர்வு ஏதுமின்றி, வெறுமனே பகைநாடொன்றினுள் புகும் எதிரிநாட்டு இராணுவம் போன்று ஊடுருவி, உள்நுளைந்து தரைமட்டமாக்கி பாதுகாப்பு வலயங்கள் எனப் பெயரிட்டு தமிழ்மக்களின் வாழ்வுரிமையை முற்றாக நிராகரித்த கொடுமையின் தாக்கங்களின் அவலங்களை தமிழ்மக்கள் இன்றும் சுமந்த வண்ணம் அன்றாடம் நியாயம் கேட்டு, நீதி கோரி அலைந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

"நாங்கள் எங்கள் வீட்டுக்கு போக நீங்கள் உங்கள் வீட்டுக்குப் போங்கள்" எனக் கடந்த இரண்டாண்டுகளில் எத்தனை தடவை மிகவும் மரியாதையாக, அதேசமயம் தமது உள்ளத்து உணர்வுகள் அனைத்தையும் கொட்டி உரக்கவே குரலெழுப்பியிருப்பார்கள்....?

அனைத்தும் பாழ்ங்கிணற்றுள் எறிந்த பாறாங்கல்லாகவேயாயின. மனிதக்குரல்களின் - தமிழ்மக்களின் குரல்களில் தொனித்த நியாயத் தன்மையை புரிந்து கொண்டு நீதிவழி நின்று சிந்திக்கும் உயரிய ஜனநாயகப் பண்பாடு சிங்கள அரசுத்தலைமைகளிடம் இன்றுவரை தோன்றியது கிடையாது என்பது தான் வருத்தம் தரும் விடயம்.

போர்நிறுத்தம் செய்ய ஆர்வம் காட்டிய அரசு, புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு வேகம் காட்டிய அரசு, சமாதானம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி சர்வதேசமெங்கனும் நிதியுதவி கோரி பிச்சா பாத்திரம் ஏந்திய அரசு தமிழ்மக்களின் வாழ்க்கையை அவரவர் சொந்த இடங்களில் மீள்குடியமரவைத்து இயல்புக்கு கொண்டுவரும் எண்ணத்தை செயல்வடிவில் நிஜமாக்க துணிச்சல் கொண்டதே இல்லை. இன்னும் வெளிப்படையாகக் கூறுவதானால் அதில் விருப்பார்வம் கிஞ்சித்தேனும் அவர்களுக்கு இருந்ததில்லை என்றே கூறலாம்.

வெறுமனே அறிக்கைகளாலும், வாக்குறுதிகளாலும் மட்டுமே தமிழ் மக்களை ஏமாற்றித் திருப்திகாணச் செய்து விடலாம் என்றே இலங்கையின் ஆட்சிபீடம் நினைத்துள்ளது என்றே எண்ணத் தோன்றுகிறது.

இராணுவ நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனைப் பாதுகாப்பதில் காட்டும் அக்கறையில் ஆயிரத்தில் ஒரு பங்கைத்தானும் தமிழ் மக்கள் தத்தம் சொந்த இடங்களில் மீள்குடியேறி இயல்பு வாழ்வை ஆரம்பிக்க உதவுவதில் இலங்கை அரசு காட்டியதே இல்லை.

இரண்டாண்டு சமாதானம் - மீள்குடியேறி தத்தம் சொந்த மண்ணில் தமது வாழ்வையும், தொழில் வளத்தையும் மேம்படுத்தி, மீண்டும் ஒரு புதிய வாழ்வைத் தொடங்க இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு அரசும், படைத்தரப்பும் அனுமதி வழங்க பின்னடிக்கும் சூழலை, தக்கவைத்துக் கொள்ளும் சாதனையை நிலைநாட்டி தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றவே செய்துள்ளது.

இதனை ஏற்றுக்கொள்ளவோ, இனியும் பொறுத்துக் கொள்ளவோ தமிழ் மக்களால் முடியாது என்பதை அரசு உணரவேண்டும்.

எத்தனையோ பேரணிகள், மறியற்போராட்டங்கள் நடத்தப்பட்டும் மகஜர்கள் பல கையளிக்கப்பட்டும், தமிழ் மக்கள் தமது இயல்பு வாழ்வினை யாசித்து அமைதியாக நடத்திய போராட்டங்கள் அனைத்தையும் சிங்கள ஆளும் வர்க்கம் கவனத்தில் எடுத்ததில்லை என்பதன் எதிரொலியாகவே - வலிகாமம் வடக்கு மற்றும் தென்மராட்சி மக்கள் ஆரம்பித்திருக்கும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டமாகும்.

தமிழ் மக்களை தம் தாயகப் பூமியில் மீளக்குடியேறி இயல்பாக வாழும் தமது வாழ்வுரிமையை அமைதிமுறையில் கோரும் இறுதி சாத்வீகப் போராட்ட வடிவமே இந்த சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டமாகும்.

இதற்கும் இலங்கை அரசு நியாயபூர்வமாக சிந்தித்து முடிவெடுக்கத் தவறுமேயானால் தமிழ் மக்கள் தமது இலட்சியத்தை வென்றெடுக்க போராட்ட வடிவத்தை மாற்ற வேண்டிய சூழல் ஏற்படுமாயின் அதற்கான பொறுப்பினை சிங்கள அரச பீடங்களை அலங்கரிக்கும் அதிகாரவர்க்கத்தினரே ஏற்கவேண்டியவர்களாவர்.

## நாடும் நடப்பும்




# ஜே.வி.பி - சுதந்திர கட்சி கூட்டை தான் விரும்பவில்லையாம்!

## மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

ஜே.வி.பி.யுடனான சுதந்திரக்கட்சியின் கூட்டை தனிப்பட்ட வகையில் தான் விரும்பவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆனாலும், தமது கூட்டணி ஆட்சிக்கு வந்த பின்னர் யுத்தம் ஏற்படாது என்பதற்கும், அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கும் ஜே.வி.பி.யினரை ஒரு இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரமுடியும் என்பதற்கும் தன்னால் உத்தரவாதம் அளிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களை நேற்று முன்தினம் சந்தித்தபோது இவ்வாறு தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் - கடந்தமுறை தமது ஆட்சிக் காலத்தில் சமாதானத் தீர்வை எட்டுவதற்கான வாய்ப்பைத் தாம் தவறவிட்டு விட்டதனையும் ஏற்றுக்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உருவாக்கத்தில் தமது அதிருப்தியினையும், சமாதானம் குறித்த தமது சந்தேகத்தினையும் மருத்துவபீட மாணவர்கள் கூறியபோதே, அவர் இதனைக் கூறினார்.

# நாற்பது மில்லியன் ரூபா செலவில் பலாலி விமானநிலையம் புனரமைப்பு

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதைகள் புனரமைக்கப்படவுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

40 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் புனரமைப்புப் பணிகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்காக இந்தியாவிலிருந்து பொறியியலாளர் குழுவொன்று இலங்கைக்கு விஜயம்செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இவ்விருநாடுகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்படவுள்ள பாதுகாப்பு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையுடன் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில் இந்திய அரசாங்கம் உறுதியாக இருப்பதாக ஜனாதிபதியின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை திருப்பியனுப்ப தூதரகம் நடவழக்கை!

(கொழும்பு)

இந்தியாவிலுள்ள நூறு அகதிமுகாம்களனில் சுமார் 63000 இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர். ஆனால், இவர்களை சொந்த நாட்டிற்கு திருப்பியனுப்ப இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே இவர்களை சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்ப இந்தியாவுக்கான இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இவ்வாறு இந்தியாவுக்கான இலங்கையின உதவித் தூதுவர் சுமித் நாகலந்த தெரிவித்தார். சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் நடைபெற்ற இலங்கையின் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டபின் நடந்த ஊடகவியலாளருடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது - சுமார் நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை அகதிகள் தமிழ் நாட்டிற்கு வெளியில் உள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர். அவர்கள் நடுதிரும்புவதற்கு ஏதாவது உதவி தேவையாக இருந்தால் இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராலயம் செய்து கொடுக்கும் என்றும் தெரிவித்தார். (01)

# பொலிஸாரின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரிப்பு

யாழ்.குடாநாட்டில் அதிகரித்துவரும் பொலிஸாரின் மனித உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகள் கவலையளிக்கிறது என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் றுவான் சந்திரசேகரா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

முன்னெப்போதுமில்லாத அளவில் கடந்தமாதம் பொலிஸார்மீது மனித உரிமை மீறல் தொடர்பாக அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து மக்களின் நலன்களைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸார் மக்கள் மீது இவ்வாறு ஒழுங்கற்ற தன்மையில் நடந்துகொள்வது கவலையளிப்பதாக அமைகின்றது.

பொலிஸார் மனிதாபிமான அடிப்படையில் பண்பாக நடந்துகொள்வதே - நாட்டிற்கும், ஜனநாயகத்திற்கும் மதிப்பளிப்பதை வெளிக்காட்டுவதாக அமையும்.

சர்வதேச ரீதியில் பொலிஸாரையே மக்கள் தமது பாதுகாவலர்களாக எண்ணுகின்றனர். இலங்கைப் பொலிஸாருக்கு நல்ல பயிற்சியும், பண்பாடும் மேலும் கற்பிக்கப்படவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தொடர்பாக எத்தனையோ போதனைகள் வழங்கப்பட்டும் இவ்வாறு பொலிஸார் பண்பற்று நடப்பது சமாதான சூழ்நிலையில் மேலும் பிரசசினைகளை வளர்ப்பதாக அமையும். இவ்விடயத்தில் அரசாங்கம் அக்கறைசெலுத்தவேண்டுமென நாம் பலமுறை வலியுறுத்தியுள்ளோம். எமது கடமையை நாம் சரிவரச் செய்கின்றோம். பொலிஸார் மீதான விசாரணைகளையும், முறைப்பாட்டையும் தொடர்ந்தும் கவனத்திலெடுத்து சரிவரக் கையாண்டுவருகின்றோம்.

எனினும், இந்த விடயத்தில் பொலிஸார் சரியான வழிகளைக் கையாண்டு மக்களுடன் சகஜமாகப்பழகி பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக்கொள்வது அவசியம்.

யாழ்ப்பாணத்தைப்பொறுத்தவரையில் பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராயப்படவேண்டிய நிலையில் பொலிஸார் இவ்வாறு பொதுமக்களுடன் முரண்பட்டுக்கொள்வது பெரும் வேலைப்பழுவை மனித உரிமைகள் ஆணைக்குழுமீது சுமத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்கள் முகம்

**விஜேந்திரன்**

# அதிகாரிகளின் பார்வையில் படுமா? நலன்புரி நிலையங்கள்

உள்நாட்டில் இடம்பெயர்ந்த அனைவரும் தகுந்த தரம் வாய்ந்த வாழ்க்கைக்கு உரிமையுடையவர்களாவர். இடம்பெயர்ந்த மக்களிற்குத் தகுதிவாய்ந்த அதிகாரிகள் எத்தகைய சந்தர்ப்பமென்பதைப் பொருட்படுத்தாமலும், பாகுபாடு காட்டாமலும் குறைந்தபட்சமாகப் பின்வருவனவற்றில் ஏதும் கிடைப்பதை உறுதி செய்தல்வேண்டும்.

**அத்தியாவசிய உணவும் குடிக்கத்தக்க நீரும்.**

**அடிப்படையான உறைவிடமும் குடிமனையும்.**

**தகுந்த ஆடைகள்.**

**அத்தியாவசிய வைத்திய சேவைகளும் சுகாதார வசதிகளும்.**

இவ்வாறு அடிப்படை வசதிகளை இடம்பெயர்ந்த நலன்புரி நிலையங்களிலும் ஏனைய இடங்களிலும் தங்கியிருப்பவர்களிற்கு வழங்கவேண்டும் என U.N.H.C.R. இனால், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களிற்கான நெறிமுறைகள் என்ற நூலில் 03 பிரிவில் 18 விதி குறிப்பிடுகின்றது.



இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்கள் பாதுகாப்பான முறையில் படையினர் வசிப்பதற்கு மட்டுமன்றி, தமிழர் பிரதேசங்களின் வாழ்விடங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள், வணக்கத்தலங்கள் என இவற்றில் வசதியான இடங்களில் முகாம் என்ற பெயரில், நிலங்களை ஆக்கிரமித்து சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர் இராணுவத்தினர்.

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, யாழ்ப்பாணக் கரையோரப்பகுதி, யாழ்.நகரப் பகுதியென யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான இடங்களை ஆக்கிரமித்து இராணுவத்தினர் வஞ்சம் தீர்த்து வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள்மூலம் உளவியல்ரீதியான யுத்தத்தை தமிழ் மக்கள்மீது இராணுவத்தினர் மேற்கொள்கின்றார்கள் என்றே தென்படுகிறது.

சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், கண்மூடித்தனமான கைதுகள், தாக்குதல்கள் என மேற்கொண்டு, களைத்துப்போயுள்ள இராணுவத்தினரிற்குக் காற்றுப்பிடிக்காமல் கம்பி வேலிகள், அரண்கள், மண்மேடுகள் என மறைப்புக்கள் அமைத்துப் பாதுகாப்பாக இருக்க அரசும், படையதிகாரிகளும் துணைபுரிகின்றனர்.

இந்தக் கிராமங்களில் ஒன்றான அம்பன் கிராமம் - தென்மராட்சிப் பிரதேசங்களில் வளம் கொழிக்கும் சிற்றூர்களில் ஒன்றான இந்தக் கிராமம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டது. J/419· கிராம சேவையாளர் எல்லைக்குட்பட்ட இந்தக் கிராம மக்கள்- 2000 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து பருத்தித்துறை, அல்வாய், நவிண்டில் போன்ற பகுதிகளில் நலன்புரி நிலையங்களிலும், உறவினர்களது வீடுகளிலும் தமது வாழ்வை நகர்த்தி வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்த 35 குடும்பங்கள், 2000 ஆம் ஆண்டிலிருந்து குடத்தனை பிரதேசத்தில் மாளிகைத்திடல் நலன்புரி நிலையத்தில் வசித்து வருகின்றனர். அடிப்படை வசதியின்றி கூலிவேலை செய்துவரும் இந்த மக்களிற்கு- உலர் உணவு நிவாரணம்கூட ஒவ்வொரு மாதமும் கிடைப்பதில்லை. அவ்வாறு கிடைத்தாலும், அவை தரமான பொருட்களாக (ஏனையவர்களுடன் ஒப்பிடுகையில்) இருப்பதில்லை. கடந்த வருடம் காலாண்டிற்கான நிவாரணப்பொருட்கள் வழங்கப்படவில்லை. என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

35 குடும்பங்களிலும் 150 இற்கு மேற்பட்ட மக்கள் உள்ளனர். இவர்களிற்கென ஒரேயொரு கிணறு மட்டுமே உள்ளது. இந்தக் கிணற்றைச் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம் அமைத்துக் கொடுத்துள்ளது. இந்தக் கிணற்றில்தான் இங்குள்ளவர்கள் தமது நீர்த் தேவைகளை நிறைவுசெய்து வருகின்றனர். குடிப்பதற்கான நீரை அருகிலுள்ள கோயில் கிணற்றில் பெற்றுவருகின்றனர்.

இந்த நலன்புரிநிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் பங்குகொண்டதில், இங்குள்ள வயோதிபர் ஒருவரின் வேண்டுகோளை அவதானிக்கமுடிந்தது. குறித்த அமைப்பைச் சேர்ந்த உயிர்ப்பூட்டல் குழுவினர பொங்கல் தினத்தில் பொங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டனர். இதன்போது வயோதிபர் கூறினார் - ஏனைய பொருட்களுடன் தண்ணீரையும் கொண்டுவாருங்கள் என. இதிலிருந்து புலப்படுகின்றது



- நீரிற்கு இங்குள்ளவர்கள் எவ்வளவு அவதிப்படுகின்றார்கள் என்று.

மணற்காடு, பொற்பதி கிராமங்களை அணமித்தே இவர்களும் உள்ளனர். 11/2 கிலோ மீற்றர் தொலைவில் கடல் உள்ளது. இந்தக் குடியிருப்புக்களை அண்மித்து மணல் அகழ்வு மேற்கொள்வதினால், கடல்நீர் உட்புகும் அபாயத்தையும் எதிர்நோக்குகின்றனர். மணற்பரப்பில் குடிசைகளை அமைத்து வாழ்வதினாலும், இவர்களது ஒவ்வொரு செயற்பாடுகளிலும் மணல் தேவைக்கதிகமான அளவுகளில் பங்குகொள்கிறது. இவர்களது சாப்பாடுகளிலும்கூட மணல் கலந்துவிடுகிறது. மண்ணும் சோறும் சாப்பிடும் வித்தியாசமான மக்களும் உள்ளனர் எமது பிரதேசங்களில்.

தனுசியா என்ற 21/2 வயதுச் சிறுமி மண் சாப்பிட்டு, மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, நீண்டநாட்கள் சிகிச்சை பெற்றுள்ளார். கடந்த நான்கு வருடங்களாக மலசலகூடப் பாவனையை மறந்தவர்களாகவே இந்த நலன்புரி மக்கள் உள்ளனர். அடிப்படை வசதிகள்கூட இன்றி அவதிப்படுகின்றனர்.

இங்குள்ளவர்களின் புலம்பல்களாக 'எங்கட நிலங்களிற்கு நாங்கள் போகவேண்டும். அங்கிருந்தால் இது போன்று மண்ணும், சோறும் சாப்பிடும்நிலை வராது. எமது கிராம வைத்தியசாலையை மட்டும் இராணுவத்தினர் - சுகாதார திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர். அம்பன் கிராமத்தில் மக்கள் இல்லை. ஏன் அங்கு வைத்தியசாலை மட்டும் கையளிக்கப்பட்டது. இவ்வாறான கண்துடைப்புக்கள் எமக்குப் புதிதல்ல' என ஆதங்கப்படும் மக்கள் - தமது பிரயாண அனுபவங்களைக் கூறுகையில்-

இங்குள்ள மாணவர்கள் பஸ் பிரயாணம் மூலமே பாடசாலை செல்கின்றார்கள். எமது கிராமத்திலிருந்து 10 கிலோமீற்றர் தொலைவிலுள்ள அரசாங்க அதிபர் பணிமனைக்கு ஒரு பஸ் பிரயாணம்மூலமே எமது தேவைகள் நிறைவு செய்யப்பட்டன.

ஆனால் இப்போது அங்கு செல்வதானால் பருத்தித்துறைக்குப் போய் பின் முகமாலைக்குப் போய், மருதங்கேணி போகவேண்டும். மூன்று பஸ்களின் பிரயாணமூலம் குறித்த தொகைப்பணத்தையும் மேலதிகமாகச் செலவு செய்யவேண்டியுள்ளது. இவ்வாறு பயணம் மேற்கொண்டும் பூரணமாக அரச கருமங்களை நிறைவேற்றமுடியவில்லை. எல்லா வழிகளிலும் இன்னல்களை அனுபவிக்கும் இந்த மக்கள் எதிர்பார்ப்பவை-

தாங்கள் தமது இடங்களிற்குப் போகவேண்டும. அங்கே தமது வீடுகளிலும் மீண்டும் குடியேறவேண்டும். தமது கிராமத்தை ஆக்கிரமித்துள்ள இராணுவம் வெளியேறவேண்டும். தாங்கள் தமது கடந்தகால வாழ்வை பெறவேண்டும். கடந்த நான்கு வருடங்களாக பெரும் துன்பங்களை அனுபவித்துள்ளோம் இந்த நிலை இனியும் வேண்டாம் என்பதாகும்.

பொறுப்பான அரச அதிகாரிகள், அலுவலர்கள் - ஏன் இவர்கள்மீது தமது பார்வையைச்செலுத்த தவறுகின்றார்கள். இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்களிற்கான உரிமைகளும், சலுகைகளும் ஏன் மறுக்கப்படுகின்றன. வசதியான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் வாழ்விடங்களைவிட்டு வந்து தங்கியுள்ளார்கள. உரிய அமைப்புக்கள். நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான உதவிகளை வழங்கினாலும் போதுமானதாக இருக்கும். இதற்கு இன்னும் எத்தனை வருடங்கள்தான் இவர்கள் காத்திருக்கவேண்டும்.

அடிப்படை சுகாதார வசதிகள், ஆரம்பக் கல்விக்கான நிலையங்கள் என எதுவித ஆரம்பச் செயற்பாடுகளும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

இவ்வாறு இதேநிலை தொடர்ந்தால் - நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்களின் எதிர்காலம் என்னாவது? இதற்குரியவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா?

சொந்தக் காணிகளில் நிரந்தரமாக நிம்மதியாக வாழ்ந்த மக்களின் குடியிருப்புக்களை ஆக்கிரமித்து, அவர்களை வெளியேற்றிய இராணுவம்- அவர்களின் சுபீட்சமான வாழ்வுக்கு எப்போது கிராமத்தை விட்டு வெளியேறும் என்று இங்குள்ள ஒவ்வொருவரது ஆவலும், எதிர்பார்ப்பும். இது எப்போது நிறைவேறும? யார்தான் உரிய பதில் சொல்வார்கள்.

## உணரப்படாத உண்மைகள்

**- செல்வா**

# நமக்கு கிடைக்கும் வேலையினை செய்துகொண்டு முன்னேறிவிடமுடியும் என்பதை எவருமே எதிர்பார்த்ததில்லை

பட்டதாரிகளுக்கு வேலை, என்ற பிரச்சனையானது. இன்றைய சமூகத்தில் இனிமேல் கல்வி கற்பவர்களுக்கு ஒரு தடையாகவே இருக்கப்போகின்றது. அதாவது படித்தும் என்ன பயன், அதைவிட ஒரு தொழில் செய்தால் முன்னேறிவிடலாம். என்கின்ற மனநிலை இன்றைய இளைஞர்களின் மனதில் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள்இருந்தவண்ணமாக உள்ளன.

வீதிக்கு வீதி பல இடங்களில் வேலை இல்லாத பட்டதாரிகள் சங்கம் அமைக்கும்போது, மாணவர்களுக்கு தூண்டுதலாகவே அமைகின்ற நிலைமையே மாணவர்களிடையே தோன்றுகின்றது. பெற்றோர்கள், பிள்ளைகளை கஷ்ரப்பட்டு படிக்க வைத்து பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று வெளியே வரும்போது தகுதியான ஒரு வேலை இல்லை என்றால் என்ன பாடுபடுவார்கள். இவர்களைவிட பெற்றோர்கள் தான் கூடுதலாக கவலைப்படுகின்றார்கள்.

இனிவரும் காலங்களில் கல்வியை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளில் இறங்குவதாக அல்லது தொழில் சம்பந்தமாக ஊக்குவிப்புக்களில் செயல்படுவதா இதனை அரசாங்கம் தான் நினைவில் செலுத்தவேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சொந்தமான வீட்டினை விற்று, காணியை விற்று, கடன்பட்டும் பணத்தினை முடித்து. பல்கலைக்கழகத்தில் படிப்பதற்காக பெற்றார்கள் செலவு செய்கின்றார்கள். படித்துமுடித்து பட்டம் பெற்று பலகலைகளோடு வெளியே வருகின்றார்கள். நல்லவேலை கிடைத்து வரும் இதன் மூலம் கடன்களை அடைத்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் வெளியே வரும்போது ஏமாற்றம்தான் காத்திருக்கின்றது..

படிக்கச் சொல்லி வீட்டில் பெற்றோர்களின் அழுத்தங்கள். படித்து முடித்து வெளியே வந்தும் அழுத்தங்கள் குறைந்ததாக இருக்க வாய்ப்பிருக்காது. பிரச்சினை கூடிக்கொண்டே இருக்கின்றன. கடன்பட்டுப் படிக்கவைத்துவிட, சும்மா சுற்றித்திரிகின்றாய். ஏதாவது ஒரு வேலைக்குப்போகச் சொல்லி பெற்றோர்களின் அழுத்தம்.

இன்று வீதிகளில் கூடுதலாக நடமாடும் இளைஞர்கள் - படித்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள். இவர்களின் வாழ்வு எங்கேபோய் முடியப்போகின்றது என்றுதான் தெரியவில்லை. இந்தச் சமூகத்தை அதற்கேற்ற இடத்தில் வைத்து, மென்மேலும் வளர்ச்சிபெற உறுதுணையாக நிற்கத் தடையாக இருப்பவர்கள் யார்? படித்து முடித்துப் பட்டம்பெற்று, வெளியே வந்த மாணவர்களின் வேண்டுகோளை ஏற்று நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது கண்டுங் காணாததுபோல் கண்மூடி நிற்பார்களா? இருந்துதான் பார்க்கவேண்டும் என்று ஆறப்போட்டதால், பல பிரச்சினைகளுக்கு மாணவர்களை இட்டுச் செல்கின்றது.

வேலையில்லாத பட்டதாரிகள் சங்கம் அமைப்பதை விட்டுவிட்டு, வேலை கொடுப்பதற்கான சங்கம் ஒன்றினை அமையுங்கள். தமிழ்நாட்டில் படித்தவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. அங்கே சனத்தொகை அதிகம். அதனால், அங்குள்ள இளைஞர்கள் படிப்புக்குச் சம்பந்தமில்லாத வேலை செய்கின்றார்கள்.

அங்குள்ள இந்தப் பிரச்சினைக்கு பார்ப்பணியம் தான் காரணமாக அமைகின்றது. இந்த நிலைமை இங்கேயும் வந்துவிடுமோ என்ற ஏக்கம் இருந்து வருகின்றது.

தமிழ்நாடுபோல் சனத்தொகை கூடவாக இல்லை. ஆகக்குறைவான கால்வாசிக்கு கால்வாசி மக்கள் தொகையாக இருக்கின்றது. இப்படியாக இருந்தும்கூட வேலை இல்லாப் பிரச்சினை உருவகிக்கப்படுகின்றது என்றால், அதனை முளையிலே கிள்ளி எறிதல்வேண்டும்.

அடிக்கடி யாழ்ப்பாணத்தில் வெளிவரும் செய்தித்தாள்களில், வேலை இல்லாப் பட்டதாரிகள் சம்பந்தமான ஒரு கலந்துரையாடல் ஒன்று - இந்த இடத்தில் இடம்பெறவுள்ளது என்றதும் பலர் பல இடங்களிலிருந்து வந்து கலந்துரையாடலில் பங்குபற்றி, எந்தவித பயனுமின்றித் திரும்பி விடுகின்றார்கள். விரைவில் நடவடிக்கை எடுப்போம் என்ற பல தலைவர்களின் சொல்லில் காத்திருக்கின்றார்கள்.

பெற்றோர்களையே பிள்ளைகள் திரும்பிக் கேள்விகேட்கும் நிலை உருவாகியுள்ளது. அதாவது, படித்து என்ன பயன்? இன்று யாழ்ப்பாணத்தில் படிக்காதவர்கள் எவ்வாறு முன்னேறியிருக்கின்றார்கள் தெரியுமா? இவர்களோடு படித்தவர்களை ஒப்பிடும்போது தரக்குறைவாக இருக்கின்றது.

பட்டம் ஒன்று பெறுவதற்காகப் படிப்பதா அல்லது அந்தப் பட்டத்தினை தக்கவைக்காமல் பறக்க விடுவதற்குப் படிப்பதா? மறியற்போராட்டங்கள் நடத்தி என்ன பயன்? செவிடன் காதில் சங்கு ஊதினதுபோல் இருக்கின்றது. தமிழர்கள் என்றால் இவ்வளவு கீழ்த்தரமாகப் போய்விட்டார்களா.

படித்துவிட்டுச் சந்திகளில் நின்று அரட்டை அடிப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? எந்தப் பிரச்சினை என்றாலும் படித்த மாணவர்களாகத்தான் இருக்கின்றார்கள். ஏனெனில், இவர்களுக்கான இடம் ஒதுக்கப்படவில்லை. இதனால், நேரத்தினைக் கழிப்பதற்கு வீண் பிரச்சினைகளில் கூடுதலாகச் சம்பந்தப்படுகின்றார்கள்.

வேலை இல்லாததால் பலர் வேலை தேடி வெளிநாடு செல்வதற்கு ஆயத்தமாகின்றார்கள். இதனால், பல நெருக்கடிக்குள் சிக்கி, மீளமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் அரைவாசி வாழ்க்கை, வெளிநாட்டுக்குச் செல்வதாக எண்ணி வீணாகக் கழிந்துபோகின்றது.

வெளிநாடு செல்வதற்காகப் பணத்தினைப் பறிகொடுத்து நடு வழியில் திரும்பிவிட்ட எத்தனை இளைஞர்கள் இங்கே இருக்கின்றார்கள்.

இறங்கிய நாடுகளில் பிடிபட்டுப் பல இளைஞர்கள் சிறைகளில் வாடுகின்றார்கள். இந்தியாவிலும் 750 பேர் கைதாகி, சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இப்படியாக இளைஞர்களின் நிலை கவலைக்குரியதாக இருக்கின்றது.

இது சம்பந்தமாக மறியற்போராட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தி, மனு கொடுத்து என்ன பயன். இன்றைய சமாதானச் சூழலில் கொழும்பையும், அதனை அண்டிய நகரங்களையும் புனரமைத்து, அங்குள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கொடுக்கும் அரசு - யாழ்ப்பாணத்தில் என்ன செய்திருக்கின்றது. வீதி புனரமைப்பதைத்தவிர வேறொன்றுமில்லை.

யாழ்ப்பாணத்தில் படித்துவிட்டு இருக்கும் இளைஞர்களில் வசதி படைத்தவர்கள் - கொழும்புக்குச் சென்று, அங்கே இருந்து கொண்டு வேலை செய்கின்றார்கள். ஆனால், போராட்ட சூழ்நிலையில் அழிந்துபோன சொத்துக்களை ஈடுசெய்யமுடியாத நிலையில், அன்றாட வாழ்க்கையினை கஷ்டத்தின் மத்தியில் நகர்த்திச்செல்லும், கூடுதலான படித்த இளைஞர்கள் - இங்கே இருக்கின்றார்கள். இவர்களின் நிலை கவலைக்குரியதாக இருக்கின்றது.

படித்த படிப்புக்கேற்ப வேலையினையே எதிர்பார்த்தவண்ணம் பலரும் இருக்கின்றார்கள். நமக்குக் கிடைக்கும் வேலையினைச் செய்துகொண்டு முன்னேறிவிட முடியும் என்பதனை யாருமே எதிர்பார்த்ததில்லை. மனதில் நிறுத்திச் செயற்பட ஆரம்பித்தால், வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்.

# இஸ்ரேலுக்கு எதிராக வெகுவிரைவில் பொருளாதார தடை விதிக்கவேண்டும்

## பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்திக்குழு கோரிக்கை

(ஜெருசலேம்)

பிரித்தானியாவின் பொதுச்சபையின் சர்வதேச அபிவிருத்திக்குழு, இஸ்ரேலுக்கெதிராக பொருளாதாரத் தடையை விதிக்கவேண்டும் என, ஐரோப்பிய ஒன்றியத்தையும், பிரத்தானிய அரசையும் கேட்டுள்ளது. பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேலிய அரசினால் - காஸா மற்றும் மேற்குக் கரைப்பிரதேசங்களில் மேற்கொண்டுவரும் கட்டுப்பாடுகள் அம்மக்களின் நாளாநத வாழ்வை சீர்குலைத்துள்ளதாகவும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

இதேநேரத்தில், இஸ்ரேலிய மக்களை தற்கொலை குண்டுதாரிகளிடமிருந்து பாதுகாப்பது அரசின் கடமை என்பதையும் அது தெரிவித்துள்ளது.

ஆனால், மேற்குக் கரைப்பகுதியில் கட்டப்பட்டுள்ள பாதுகாப்பு தடுப்புச்சுவர், வருங்காலத்தில் பலஸ்தீனர்களுக்கு நாடு ஒன்று உருவாகுவதை தடைசெய்துள்ளதாகவும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய அரசினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் கடந்த ஆறு மாதங்களாக இடம் பெற்றுவரும் மனிதநேய பிரச்சினைகள் தொடர்பாக இந்தக் குழு ஆராய்ந்துள்ளது.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்குட்பட்ட பிரதேசத்தில் ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்துக்கு பொருட்களை நகர்த்துவது மற்றும் சுதந்திரமான பிரயாணங்களை மேற்கொள்வது போன்றவற்றில் பலஸ்தீனமக்கள் பல கஸ்ரங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதால் அவர்களின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளதாகவும்,

சகாரா பிரதேசத்தில் வாழும் மக்களைப் போன்று, பலஸ்தீனமக்களும் ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 70 வீதமான மக்கள் தொழில வாய்ப்பின்றிக் கஸ்ரப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குழு பிரித்தானியாவின் பழமைவாதக்கட்சியின் நாடாளுமன்ற அங்கத்தவர் ரொனிபாட்ரை தலைமையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.



ரொனி கருத்துத் தெரிவிக்கும்போது, பலஸ்தீன தற்கொலைக் குண்டுதாரிகள் உருவாகுவதற்கு அம்மக்கள் மீது இஸ்ரேலிய அரசினால் பிரயோகிக்கப்படும் அழுத்தமும் காரணமெனவும்,

காஸா மற்றும் மேற்குக்கரை பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு உதவிவழங்க முன்வரும் அமைப்புக்களின் உதவிகள் மூலம் ஏற்படுத்தப்படும் நிர்மாணப்பணிகள் மீண்டும் அழிக்கப்படமாட்டாது என அவ்அமைப்புக்களுக்கு இஸ்ரேல் உறுதி தெரிவிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். இறுதியாக அந்தக்குழு ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கோபிஅனானிடம் இஸ்ரேலிய அரசினால் பலஸ்தீன மக்கள் மீது மேற்கொள்ளப்டும் ஆக்கிரமிப்பு மனித நேயமுடையதா? என்பதை ஆராய் வதற்கு மனிதநேய தூதுவரை பலஸ்தீனத்துக்கு நிய மிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளது.

# இந்திய நாடாளுமன்றம் இன்று கலைக்கப்படும்!

## வாஜ்பாய் தலைமையில் காபந்து அரசு

நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டி தேர்தல் நடத்த மத்தியில் உள்ள பாரதியஜனதா அரசு முடிவுசெய்துள்ளது.

இதையொட்டி நாடாளுமன்றத்தில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

பாராளுமன்றக்கூட்டம் நேற்றுடன் முடிவடைகிறது. இதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தைக் கலைக்கும்படி மத்திய மந்திரிசபை ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு பரிந்துரை செய்யும்.

இதை ஏற்று நாடாளுமன்றம் இன்று கலைக்கப்படும் . புதிய ஆட்சி அமையும் வரை வாஜ்பாய் தலைமையிலான அரசு காபந்தரசாக செயற்படும்.

நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தேர்தல் கமிசனர் தீவிரமாகச் செய்துவருகிறார். டெல்லியில் நேற்று முன்தினம் மாநில தேர்தல் அதிகாரிகள் கூட்டம் நடந்தது. தேர்தல் குறித்தும் அதிகாரிகளுடன் தேர்தல் கமிசனர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. தேர்தலை 4 கட்டமாக நடத்துவது என்று முடிவு செய்ப்பபட்டது. முதல் கட்ட தேர்தல் ஏப்ரல் 15 ஆம் திகதி நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மே 5 ஆம் திகதி தேர்தல் நடைமுறைகள் அனைத்தும் முடிந்துவிடும் மே 7 ஆம் திகதி புதிய அரசு மத்தியில் ஆட்சி அமைக்கும் என்று தேர்தல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மார்ச், ஏப்ரல் மாதம் பள்ளி, கல்லூரிகள் தேர்வு நடைபெறுகிறது. தேர்வுகள் பாதிக்காத வகையில் தேர்தல் திகதி முடிவுசெய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

எப்ரல் 7 ஆம் திகதி பள்ளித் தேர்வு அனைத்தும் முடிவடைய வேண்டும் என்று அனைத்து மாநில அரசுகளுக்கும் தேர்தல் கமிசனர் ஏற்கனவே வலியுறுத்தி உள்ளார். எனவே ஏப்ரல் 7 ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் நடைமுறைகள் தொடங்க வாய்ப்பு இல்லை.

இந்தத் தடவை முதல் முறையாக நாடுமுழுவதும் இயந்திர வாக்குப் பதிவு மூலம் தேர்தல் நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இதுபற்றியும் தேர்தல் அதிகாரிகள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

திருத்தப்பட்ட வாக்காளர்கள் பட்டியல் அடிப்படையில் வாக்கு இயந்திரங்கள் எவ்வளவு தேவைப்படும் என்பது பற்றி கணக்கிடப்பட்டது. தேவையான வாக்குப் பதிவு இயந்திரங்களைத் தயாரித்துக் கொடுக்கும்படி 'பெல்' நிறுவனத்தை தேர்தல் கமிசனர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சதாம் ஹுசைன் தங்கியிருந்த வீடு அமெரிக்கப் படையினரால் சீல் வைப்பு!

## பார்வையாளர் செல்லத்தடை

(திக்ரித்)

சதாம் ஹுசைன் பிடிக்கப்பட்ட இரகசிய பாதாள அறையையும், அதன் அருகே உள்ள சிறிய வீட்டையும் அமெரிக்கப்படை சீல் வைக்க முடிவு செய்துள்ளது.

ஈராக் அதிபராக இருந்த சதாம் ஹுசைன் போருக்குபின் தலைமறைவானார். எட்டு மாதத்திற்கு பின் திக்ரித்துக்கு அருகே உள்ள ஒரு பண்ணையில் அவர் பதுங்கியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பண்ணையிலுள்ள சிறிய மண் வீட்டுக்கு அருகே அமைக்கப்பட்டிருந்த இரகசிய பாதாள அறையில் சதாம் தூங்கிக்கொண்டிருந்தார். அவரை தட்டியெழுப்பி கைதுசெய்தது அமெரிக்கப்படை. கடந்த ஆண்டு டிசெம்பர் 13 ஆம் திகதி இந்தச் சம்பவம் நடந்தது. தற்போது அமெரிக்கப்படைகளின் பிடியில் அவர் உள்ளார்.

சதாம் கடைசியாக தங்கியிருந்த வீடும், இரகசிய பாதாள அறையும் சுற்றுலாத்தளமாக மாறிக்கொண்டிருக்கிறது. ஈராக்கில் பயணம்செய்யும் வி.ஐ.பிக்களும், மக்களும் இந்த இடத்திற்கு ஆர்வமாகச் சென்று பார்க்கின்றனர்.

சதாமைப்பிடித்த அமெரிக்கப் படையின் நாலாவது பிரிவு அதை விரும்பவில்லை. அந்தப் பண்ணை வீட்டையும், இரகசிய பாதாள அறையையும் தகர்க்க இராணுவ உயர் அதிகாரிகளிடம் அனுமதி கேட்டது.

ஆனால், இந்தக் கோரிக்கையை இராணுவ உயர் அதிகாரிகள் நிராகரித்துவிட்டனர்.

பண்ணைவீட்டையும், இரகசிய பாதாள அறையையும் அழிக்க வேண்டாம் என்றும் அதற்குப் பதிலாக அதை முழுவதுமாக சீல் வைத்துவிடும்படியும் 4ஆவது படைப் பிரிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் அங்கு செல்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

# கொலம்பிய மக்கள் எதிர்நோக்கும் மோசமான மனிதநேய பிரச்சினைகள்

ஆபிரிக்கக் கண்டத்துக்கு வெளியே அமைந்துள்ள நாடுகளில் வாழ்கின்ற மக்களில் கொலம்பியா மிகவும் மோசமான மனிதநேய பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொங்கோ குடியரசு, சூடான் ஆகிய நாடுகளில் மனிதநேய பிரச்சினைகளால் மக்கள் அதிகளவில் பாதிப்படைந்துள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உதவி உயர் ஸ்தானிகர் 'கமல் மொர்ஜானி' கூறினார்.

அதனோடு ஒப்பிடுகையில் கொலம்பிய மக்களின் நிலை மிகவும் மோசமானதாகும். கொலம்பியாவில் கடந்த 39 ஆண்டுகளாகத் தொடரும் உள்நாட்டுப் போரினால் 3 மில்லியன் மக்கள் தமது புகலிடங்களில் இருந்து வெளியேறவேண்டிய நிலைக்கு நிர்ப்பாந்திக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச சமூகத்திடம் கூடுதலான உதவிகளை வழங்குவதற்கு முன்வருமாறு ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



கொலம்பியா மற்றும் குவடோர் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உதவி உயர்ஸ்தானிகர் கருத்துத் தெரிவிக்கும்போது - ஆபிரிக்க நாடுகளில் வறுமைமிகுந்த ஒரு பிரதேசத்தில் நிற்பதுபோன்ற ஒரு பிரமை கொலம்பியாவில் தனக்கேற்பட்டதாக பிரஞ்சுப் பத்திரிகை ஒன்றிக்கு தெரிவித்தார்.

இது ஒரு தேசியப் பிரச்சினை எனவும், சர்வதேச நாடுகளில் குடிபெயர்ந்துள்ளவர்களின் பிரச்சினை இதில் உள்ளடக்கப்படவில்லை எனவும் கூறினார்.

இதுவரை காலமாக கொலம்பியாவில் போதைவஸ்துக் கடத்தல் மற்றும் கொலம்பிய போராளிகளுக்கும், அரசிற்கும் இடையில் நிலவும் பிரச்சினைகள் பற்றிப் பேசப்பட்டு வருவதன்மூலம் கொலம்பிய மக்களின் வறுமைநிலை அதனோடிணைந்த பிரச்சினைகள் மூடிமறைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக நோக்கு

# பாகிஸ்தான் அணு விஞ்ஞானி குற்றத்தை ஒப்புக்கொண்டார்!



அணு ஆயுத தொழில்நுட்ப இரகசியங்களை லிபியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு விற்பனை செய்தார் என்ற குற்றத்தின் பேரில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த பாகிஸ்தான் விஞ்ஞானி 'அப்துல் கையீர்கான்' தனது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

இதன் பின்னர் 'கானால்' சமர்ப்பிக்கப்பட்ட கருணை மனுவை பரிசீலனை செய்வதற்கு பாகிஸ்தான் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் தீர்மானித்துள்ளனர்.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தலைமையில், அணுசக்தி, அமைப்பு தொடர்பான அங்கத்தவர்கள் கூடி கலந்தாலோசித்த பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

பாகிஸ்தான் அதிபரின் சிபார்சின் மூலம் கானுக்கு மன்னிப்பளிக்க முன்வந்திருப்பதாகவும், கான் தண்டிக்கப்படுவார் என்ற பொதுமக்களின் எண்ணத்திற்கு இடமில்லை என செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் அரசாங்கத்தின் உதவியுடனே அணுஆயுத தொழில்நுட்ப இரகசியங்களை 'கான்' ஏனைய நாடுகளுக்கு விற்றுள்ளார் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தக் குற்றச் சாட்டையும் நிராகரிக்கும் வகையில்தான் தனது விசாரணையின்போது, பாகிஸ்தான் அதிபர் முஷாரப் மற்றும் அரசாங்க இராணுவ அணுஆயுத இரகசியங்களை வெளியிட்டதில் அதிகாரிகளுக்கு எதுவித தொடர்புகளுமில்லை எனவும் பாகிஸ்தான் அரசாங்கம் தனக்கு இவற்றை லிபியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு தெரிவிப்பதற்கு எதுவித அதிகாரங் களையும் வழங்கவில்லை எனவும் 'கான்' தெரிவித்திருந்தார்.

பாகிஸ்தான் அதிகாரிகள் 'கானின்' செயற்பாடுகள் தொடர்பாக மேலும் தெரிவிக்கும்போது - கான் பலமுறை சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்ட விமானப் பயணங்களை மேற்கொண்டிருந்தார் எனவும், அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யக்கூடிய தரத்தில் யுரேனியத்தை எவ்வாறு உற்பத்தி செய்வதென்பதை தெரிவித்திருந்தார் எனவும் -

இதைவிட இரகசியமுறையில் ஈரான் மற்றும் லிபியா, வடகொரிய ஆகிய நாடுகளுக்கு சென்று அந்நாட்டு விஞ்ஞானிகளுடன் எவ்வாறு அணு குண்டு உருவாக்குவது என்ற கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு பாகிஸ்தான் அதிபர் அடிபணிந்துள்ளதாக அவர் மீது குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஸ்ரீ நகரில்

# நிலக் கண்ணி வெடித்ததில் நான்கு இந்திய வீரர் பலி!

(புதுடெல்கி)

காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகரில் நேற்று இந்திய பாதுகாப்புப் படையினரின் வண்டி ஒன்று கண்ணிவெடியில் சிக்கியதில் அதில் பயணம் செய்த நான்கு இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த கண்ணிவெடி விபத்துக்குக் காரணம் காஷ்மீர் பிரிவினைவாதிகள் எனக்கருதப்படுகிறது.

விபத்து நடைபெற்ற பிரதேசம் தற்போது போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

காஷ்மீர் பிரிவினைவாத தலைவர்களுடன் இந்தியத் தலைவர்கள் பேச்சுக்களை ஆரம்பித்த பின்னர் நடைபெற்றுள்ள முதலாவது பாரிய தாக்குதல் இது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதத்திலிருந்து காஷ்மீர் எல்லையின் இரு பக்கங்களிலும் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற வேளையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த மாதம் காஷ்மீர் பிரச்சினை தொடர்பான பேச்சுக்களில் இந்திய-பாகிஸ்தான் தலைவர்கள் ஈடுபடுவதற்கு திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




"சமாதானத்தின் மீது புலிகள் காட்டும் ஆர்வம் மிகவும் பாராட்டத்தக்கது என்று சந்திரிகா புகழ்ந்திருக்கிறாரே"

"மாற்றிச் சொல்லு மணியம்... புகழ்ந்திருக்கிறாரல்ல... மனம் புழுங்கியிருக்கிறார்... சமாதானத்தைப் புலிகள் - தான் ஆரம்பத்தில் எதிர்பார்த்ததைப் போன்று இரண்டொரு மாதத்தில் குழப்பிவிடவில்லை என்பது சந்திரிகாவுக்கு பெரும் துக்கம். அதனால்தான் அடிமனதில் புழுங்கிக்கொண்டு நுனி நாக்கால் புகழ்ந்திருக்கிறார்."

"சரி... சரி... சமாதானத்தைக் குழப்புவதில் சந்திரிகா காட்டும் விருப்பார்வத்தை ஜே.வி.பியினர் புகழ்ந்திருக்கிறார்களே... இதனைப் பற்றி என்ன நினைக்கிறாய்."

"அவர்களின் கோரிக்கையை அம்மணி ஒவ்வொன்றாய் நிறைவேற்றி வருகின்றார்... அவ்வளவும்தான்."

"ஒருவருக்கொருவர் பகையுணர்வகொள்வது தொடர்வதானது நாடுசீரழியவே வழிவகுக்கும் என்றுமெல்லே... அம்மணி சொல்லியிருக்கிறா."

"சாத்தானும் சிலவேளைகளில் வேதம் ஓதுமாம். அதை நம்புறவர் பாடு அதோகதிதான்... அதுபோலத்தான் இதுவும் ஆயுதங்களை வாங்கிக் குவிக்க முயலுவதும், இந்தியா... அமெரிக்கா... போன்ற நாடுகளுடன் பாதுகாப்பு உடன்படிக்கையை செய்யத் துடிப்பதும் நட்புறவினை வளர்க்கும் நடவடிக்கை என்று நம்பச் சொல்லுறாவோ...?"

"என்னவோ, தேர்தல் வரப்போகுது போல...கழுகு, சமாதானப் புறாவாக உருமாற்றிக்கொள்ள நினைக்கிறது போல..."

"சரியாய்ச் சொன்னாய்... உனக்குச் சிலவேளை மூளை சரியாத்தான் வேலை செய்யுது...!?"

தெருவாசி

# கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக 6 பொலிஸாருக்கு எதிராகப் புகார்!

## யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வவுனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் ஆறு பேருக்கு எதிராக, யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கொழும்பைச் சேர்ந்த வான் சாரதியான கதிரேசன் ஜெயகாந்தன் என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்தார்.

அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

கடந்த முதலாம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளை ஏற்றிவந்து கொண்டிருந்தபோது, வவுனியாவில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையம் ஒன்றில் வைத்து சிவில் உடையில் வந்த ஆறு பொலிஸார் என்னைக் கொலை செய்யப்போவதாக மிரட்டினர்.

2001 ஆம் ஆண்டு பொலிஸார் மீது அநுராதபுரத்தில் வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கும், எனக்கும் தொடர்பிருப்பதாகத் தெரிவித்தே அவர்கள் என்னை மிரட்டினார்கள்.

இது குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்தபோதும், அதனை அவர்கள் ஏற்காது நிராகரித்துவிட்டனர்.

எனவே, மனித உரிமை ஆணைக்குழுவினர் எனக்குத் தகுந்த பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளித்தல் வேண்டுமெனத் தெரிவித்தே அவர் தனது முறைப்பாட்டைச் செய்துள்ளார். (ப)

# உண்ணாவிரத போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு கோரிக்கை

## வலி. வடக்கு, தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள்

வலி. வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி நடைபெற்று வரும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்குமாறு வலி. வடக்கு மற்றும் வலி. தெற்குப் பொது அமைப்புக்களின் ஒன்றியங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதுதொடர்பாக, வலி. வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் எஸ்.சிவமகாராஜா, வலி. தெற்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வலி. வடக்கில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு சுதந்திர தினமான நேற்றுமுன்தினம், இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தின் ஏற்பாடடில் - சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றுவருகின்றது.

இவற்றுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து, குடாநாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்துவரும் மக்களையும் இந்தப் பகுதியைச் சேர்ந்த அரச மற்றும் அரசசார்பற்ற திணைக்களங்கள், கூட்டுறவாளர்கள், பாடசாலை மாணவர்கள், விவசாய சம்மேளனங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# 2000 முஸ்லிம்களை உடனடியாக பொலிஸ் படையில் சேருங்கள்

## கிழக்கு முஸ்லிம் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

பொலிஸ்படையில் இரண்டாயிரம் முஸ்லிம்களை உடனடியாகத் திரட்ட நடவடிக்கை எடுக்குமாறு - கிழக்கிலங்கையை மையமாகக் கொண்டு செயற்படும் முஸ்லிம்களின் சபை என்ற அமைப்பு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் கோரியிருப்பதாக பாகிஸ்தான் பத்திரிகையான டோன் நேற்றுச் செய்திவெளியிட்டிருந்தது.

இது குறித்து மேலும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும், கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை தடுத்து நிறுத்துவதற்கும் - அவசரமாகவும், முன்னுரிமை அடிப்படையிலும் இரண்டாயிரம் பொலிஸாரைத் திரட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

கடந்த வருடம் தோப்பூர், மூதூர், கிண்ணியா போன்ற பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்தே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று அந்த அமைப்பு தனது கோரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

முஸ்லிம்களின் சபை என்ற அந்த அமைப்பு - அரச சார்பற்ற ஒரு நிறுவனமாகும். இந்த அமைப்பு கிழக்கிலுள்ள நிலையைக்கண்டறிய அனுப்பிய குழு சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்து - நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் கிண்ணியா, மூதூர் போன்ற பகுதிகளில் அரச படையினர் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறினால் - அது ஆபத்தான நிலைக்குக் கொண்டுசெல்லும் என்றும்,

2002 ஆம் ஆண்டு பெப்ரவரியில் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர், கிழக்கில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன என்றும் இந்த அமைப்பு சுட்டிக்காட்டியிருந்தது.

### யாழ். படை....

நோன்பிருக்கும் இடத்திற்கு வருமாறும், நாம் ஒருபோதும் அவரது இடத்திற்குச் செல்லப்போவதில்லை எனவும், நியாயமான தீர்வையே எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ப),(91)

### தெல்லிப்பழை....

தினர். மோட்டார் சைக்கிளின் சாவியைப் பறித்தெடுத்ததுடன், அருகிலிருந்த இராணுவ முகாமுக்கு அவர்களை அழைத்துச் செல்ல முற்பட்டபோது அவர்கள் மறுத்துவிட்டனர்.

இந்த நிலையில், அவ்விடத்திற்கு வந்த பொலிஸ் அதிகாரி இராணுவத்தினரிடம் மோட்டார் சைக்கிள் சாவியை வாங்கி புலி உறுப்பினரிடம் கொடுத்து அவர்களைத் தொடர்ந்து செல்ல அனுமதித்தார்கள். இந்தச் சம்பவத்தை யாழ்.மாவட்ட அரசியற் துறையினர் வன்மையாகக் கண்டித்ததுடன், மனிதஉரிமை ஆணைக் குழுவிடமும், போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

# நோர்வே மாணவர்கள் ஆய்வுக்காக வருகை!

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் நோர்வேயின் பங்கு என்ற தலைப்பில் ஆய்வொன்றைச் செய்வதற்காக, நோர்வே பல்கலைக்கழக மாணவர்கள் ஐந்து பேர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் நோர்வே தொடர்ந்தும் பங்கெடுக்க வேண்டுமா, நோர்வே எத்தகைய மாற்றங்களைத் தனது முயற்சியில் செய்துகொள்ள வேண்டும், சந்திரிகா தலைமையிலான அரசு சமாதான முன்னெடுப்பினை விரும்புகின்றதா என்பன தொடர்பாக இங்கு ஆய்வை மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ராட்சத சரக்கு...

கப்படும் இந்த விமானம் ரஷ்யாவுக்குச் சொந்தமானதாகும். கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்த சரக்கு விமானத்தை விமானி தரையிறக்க முற்பட்டபோது, முன்சக்கரங்கள் வெளியே வராமல் சிக்கிக் கொண்டன.

இதனால், ஓடுபாதையில் இந்த விமானம் முன்பக்கமாக மோதித் தரையிறங்கியது. நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில், சரக்கு விமானத்தின் இடதுபுற இயந்திரம் முற்றாகச் சேதமடைந்த போதிலும், எவருககும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

விமானத்தில் பெருமளவு சரக்குகள் இருந்தமையால் உடனடியாக ஓடுபாதையில் இருந்து விமானத்தை அகற்ற முடியவில்லை. இதனால், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கவும், புறப்பட்டுச் செல்லவும் முடியாத நிலையில் சுமார் 10 மணி நேரம் விமான நிலையம் மூடப்பட்டது.

இந்த விபத்தையடுத்து மூடப்பட்ட விமான நிலையத்தில், நேற்றுக் காலை 8.15 மணியளவிலேயே சூரிச்சிலிருந்துவந்த முதல் விமானம் தரையிறங்கியது.

10 மணி நேரம் விமான நிலையம் மூடப்பட்டிருந்ததால், கட்டுநாயக்காவில் தரையிறங்க வேண்டிய விமானங்கள்யாவும் சென்னை விமான நிலையத்திற்கு திருப்பிவிடப்பட்டன. இந்த விபத்துக் குறித்து சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அன்ரனோவ் - 12 ரக சரக்கு விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதிலிருந்து ஆறு விமான சிப்பந்திகளும், மேலும் மூவரும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### நேற்றும் தொடர்ந்து...

ஈடுபட்டுள்ளனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவோர் நேற்றுச் சோர்வடைந்த நிலையிலேயே காணப்பட்டனர். இவர்களில்,வலி. வடக்கில் உண்ணாநோன்பு இருக்கும் செல்லையா செல்வராசா (வயது 37) என்பவரின் உடல்நிலை மோசமடைந்ததையடுத்து அவருக்கு சேலைன் ஏற்றப்பட்டது.

சாகும்வரையான உண்ணாநோன்பைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதில் போராட்டத்தை நடத்தி வருவோர் உறுதியாக இருக்கின்றனர்.

உண்ணாநோன்பிருந்து வருவோருக்கு ஆதரவாக, உயர்பாதுகாப்பு வலயத்தினுள் தமது வீடுகளையும், காணிகளையும் இழந்து நிற்கும் பலர் சுழற்சி முறையில் உண்ணாநோன்பிருந்து வருகின்றனர். இவர்களுக்கு அருகில் பொலிஸார் தொடர்ந்தும் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். (91)

### இராணுவம், அதிரடிப்படை...

இவ்வாறு இவர்கள் இருபகுதியினரும் சந்தித்துக் கலந்துரையாடி, அவற்றினை அனுசரித்துச் செல்வதும் ஒருவரது கருத்தை மற்றவர் கேட்பதும் முக்கியமான ஒரு விடயமாகும்.

விடுதலைப் புலிகளும் படைத்தரப்பினரும் இவ்வாறு உள்ளூரில் சந்தித்துக் கதைப்பது தொடரவேண்டும். இதுதான் சமாதான வழிக்கான முதுகெலும்பாகும்.

தற்போது பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் உள்ளதால், கண்காணிப்புக் குழுவின் தொடர்பு முறைகளும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

இதுநாள்வரை நடந்த யுத்தத்தில் 64 ஆயிரம் பொதுமக்கள் கொலல்ப்பட்ட நிலையிலும் சமாதானப் பேச்சுக்களை முன்கொண்டு செல்வதற்குத் தடையாக இரண்டு பகுதிகளிலும் குழப்பவாதிகள் உள்ளனர்.

சமாதான நடவடிக்கைகளின் மூலம் ஒரு தீர்வு காணப்படும்வரை கண்காணிப்புக் குழுவின் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனவும் புறூவ் ஹொவ்டே மேலும் தெரிவித்தார்.

### நாடாளுமன்ற கலைப்புக்கு சமாதான....

ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைப்பாராக இருந்தால், புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட இரண்டாம் ஆண்டு நிறைவு தினமான எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

இது தொடர்பாக இந்த முன்னணி நேற்று ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் கடிதமொன்றை அனுப்பிவைத்தது.

அந்தக் கடிதத்தில் ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைக்கக் கூடாதெனவும், அவ்வாறு அவர் கலைத்து தேர்தலுக்கு உத்தரவிட்டால், தற்போதைய போர் நிறுத்த உடன்படிக்கை முறிவடைந்து யுத்தம் மூளும் சாத்தியம் உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன், இரு தலைவர்களும் சமாதான முயற்சியில் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் ஏனெனில், இது நாட்டினை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு அத்தியாவசியமானது எனவும், அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை - எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில், பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளை இணைததுக்கொள்வது தொடர்பாக, நாளை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இந்த முன்னணியினால் கூட்டமொன்று ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தில், வடக்கு, தெற்கு பகுதிகளில் இருந்தும் சுமார் 10000 பேரை இந்த முன்னணியின் 400 அமைப்பாளர்கள் திரட்டுவார்கள் என எதிர்பார்ப்பதாக இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஒழுங்குகளை மேற்கொண்டிருப்பவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த முன்னணியின் கூட்டத்தில் முன்னணியின் உறுப்பினர்களான காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன இன்ரநஷனல் அலேட் அமைப்பைச் சேர்ந்த குமார் ரூபசிங்க, முன்னாள் சட்டமா அதிபர் சிறிநாத் பெரேரா, வண.பிதா.அன்சலம் பெரேரா மற்றும் பிரபல நடிகர் ஜோய் அபயவிக்கிரம ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.